திருவள்ளுவர் ஆண்டு 2039

# செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி :102 பகுதி : 10 | அக்டோபர் - 08 | விலை ரூ. 10/-



மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

# என்று கேட்போம்?

கவிவேந்தர் கா.வேழவேந்தன்

சிரிக்கின்ற ரோசாவைப் பறித்து வந்தே
சிதைத்திங்கே பிழிந்தெடுக்கும் இரத்தம் தானே
இருக்கின்ற அத்தர் என மணக்கக் கண்டோம்;
எழிற்பன்னீர் எது ? ரோசா செந்நீர் தானே !
ஒருநாளே வாழ்ந்தாலும் உயர்ந்த ரோசா
ஒப்பரிய தியாகத்தால் ஓங்கி நிற்கும் !
அரும்பிறவி எனும்மனிதர் நாமும் அந்த
அழகுமலர்ப் பாடத்தை என்று கேட்போம் ?
வெண்பளிங்குத் தந்தமுடன் வனத்தில் வாழும்
வேழத்தைச் சூழ்ச்சியுடன் குழிகள் வெட்டிக்
கண்ணிவைத்துப் பிடிக்கின்றோம்; பிடித்த பின்னர்
கத்தியினால் அதன்தந்தம் வெட்டி, அஃதை
எண்ணரிய அழகுவண்ணப் பொருள்கள் ஆக்கி
இல்லமெலாம் கொலுவைத்துப் பூரிக் கின்றோம் !
கண்ணைவிற்றேஒளிபெறுவோம் நாமும், யானை
கற்பிக்கும் பாடத்தை என்று கேட்போம் ?
பளபளக்கும் பட்டாடைக் கதைதான் என்ன ?
பலபட்டுப் பூச்சிகளை வளர்ப்போம்; பின்னர்
தளம்போன்றேகூடும் அவை அமைக்கும் போதில்
தகிக்கின்றவெந்நீரில் தூக்கிப் போட்டு
மளமளவென் றேஅவற்றைக் கொன்று தீர்த்தே
மனமீர்க்கும் பட்டிழைகள் எடுப்போம் என்றால்,
உளமில்லா மனிதர்நாம் பாவப் பூச்சி
உணர்த்துகின்றபாடத்தை என்று கேட்போம் ?

# செந்தமிழ்

(தோற்றம் 1902)


தொகுதி : 102
பகுதி : 10
**அக்டோபர் 2008**

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு **2039**




வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |

முகவை மன்னர் **நா.குமரன் சேதுபதி**
தலைவர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்.


**ஆசிரியர்**

**இரா. அழகுமலை** எம்.ஏ., எம்ஃபில்.,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை.

## பொருளடக்கம்

இதழ்மணம் 3

புறநானூறு காட்டும் தமிழரின் மானம் 4
முனைவர் பி.இந்திராகாந்தி

வள்ளலும் ஒரு கொள்ளைக்காரரே! 8
நாவுக்கரசர், முனைவர்.சோ.சத்தியசீலன்

மு.இராகவையங்காரின் செந்தமிழ்ப்பணி 12
ம.சா.அறிவுடைநம்பி

பாரதிதாசன் பாடல்களில் மானுட நேயம் 16
(சென்ற இதழ்த் தொடர்ச்சி) டாக்டர் மா.இராமச்சந்திரன்

மடலூர்தல் புலவர். க.தண்டபாணி 29

கடவுள் நம்பிக்கை முனைவர்.மெ.மெய்யப்பன் 32

# இதழ் மணம்

மதுரைத் தமிழ்ச் சங்கம் தனது நூற்றாண்டு விழாக்கண்ட பெருமிதத்தோடு தமிழ்வளம் செழிக்கும் வகையில் அக்டோபர் மாத இதழ் வெளிவருகிறது.

மானம் பெரிதென்று எண்ணி, 'ஓர் அவமானம்வரின் உயிரைத் துச்சமாக எண்ணி வாழும் தமிழர்களின் உயரிய பண்பாட்டைப் புறநானூறு கொண்டு விளக்கி, வீரத்தமிழ் மரபினை செப்புவதாய் முனைவர். **பி.இந்திராகாந்தி** அவர்களின் கட்டுரை அமைந்துள்ளது.

வள்ளலார் மற்ற தத்துவஞானியர்களிடம் இருந்து மாறுபட்டவர்; வேறுபட்டவர்; அவரது நோக்கம்; சன்மார்க்கத்தின் ஆறு படிநிலைகள்; மனதைக் கொள்ளை கொள்ளும் கொள்ளைக்காரராக வள்ளலார் எவ்வாறு விளங்குகிறார் என்பதை விளக்குவதாய் முனைவர் **சோ.சத்தியசீலன்** அவர்களின் கட்டுரை அமைந்துள்ளது.

அறிஞர் மு.இராகவையங்காரின் பல்வேறு பரிமாணங்களை வெளிப்படுத்துவதாக முனைவர் **ம.சா.அறிவுடைநம்பி** அவர்களின் "**மு.இராகவையங்காரின் செந்தமிழ்ப்பணி**" எனும் கட்டுரை அமைந்துள்ளது.

மானுடம் மறைந்து, மனிதநேயம் நசுக்கப்பட்டுக்கிடக்கும் வேளையில் பாவேந்தரின் பாடல்வரிகளின் மூலம் மானுட நேயத்தின் அவசியம் குறித்து **டாக்டர் மா.இராமச்சந்திரன்** அவர்கள் வரைந்திட்ட "**பாரதிதாசன் பாடல்களில் மானுட நேயம்**" எனும் கட்டுரை விளக்கித் தொடர்கிறது.

பெருந்திணையில் காணப்படும் நான்கு திறங்களுள் ஒன்றான மடலூர்தல் பற்றித் தமிழ் இலக்கியங்கள் எவ்வகையில் திறம்பட புலமை வெளிப்பட படைத்துள்ளனர் என்பதைப் புலவர் **க.தண்டபாணி** அவர்களின் "**மடலூர்தல்**" எனும் கட்டுரை விளக்கி நிற்கிறது.

அறிவியலால் உடல் நலம்பெறும் என்றால், 'ஆன்மீகத்தில் உயிர் நலம்பெற, ஆன்மீகம் மிகவும் இன்றியமையாததாகும் என முனைவர் **மெ.மெய்யப்பனாரின்** '**கடவுள் நம்பிக்கை**' கட்டுரை விளக்கமளிக்கிறது.

'**இளைஞர்களின் கையில் இந்தியா**' எனும் பாரதப்பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்களின் உரை இதழைச் சிறப்பிக்கிறது. தமிழ்ச் சங்கப் புரவலரும், புலவருமான வள்ளல் பாண்டித்துரைத்தேவரைப் பற்றிய கவிஞர் சுரதாவின் கவிதை இதழுக்கு வனப்புச் சேர்த்து உங்கள் கைகளில் தவழ்கிறது.

# புறநானூறு காட்டும் தமிழரின் மானம்

முனைவர்.பி.இந்திராகாந்தி

சங்க இலக்கியங்கள் தமிழர்தம் வாழ்வியல் நாகரிகத்தைக் காட்டும் கடல்; சங்ககாலத் தமிழர்களின் வாழ்வு ஒரு பொற்கால வாழ்வு; அவர்களின் வாழ்வியல் தர்மங்களையும், வாழ்வியல் அழகையும் கண்ணாடி போல் காட்டுவன சங்க இலக்கியங்கள். சங்க நூல்களில் அக நூல்கள் தமிழனின் அகவாழ்வு அழகையும், புறநூல்கள் அவனின் புற வாழ்க்கை செம்மையையும் வெளிப்படுத்துகின்றன. புறப்பொருள் வெண்பாமாலை,

> "கல்தோன்றி மண்தோன்றா காலத்தே
> வா ளொடு முன் தோன்றிய மூத்தகுடி"

என்று தமிழனின் குடித்தொன்மையையும் வீரச் சிறப்பையும் குறிக்கிறது. வாழ்க்கைக்கும் இலக்கணம் கண்டவன் தமிழன். தொல்காப்பியப் பொருளதிகாரம் இதனை மெய்மையாக்கும். வாழ்வை முறைப்படுத்திச் செம்மையாக அறத்துடனும், மானத்துடனும் வாழ்ந்த சிறப்புடையவன் தமிழன். இத்துடன் நில்லாது வாழ்வை அகம், புறம் என இரண்டாகப் பகுத்து இரண்டையும் நெறியுடன் வாழ்ந்து காட்டியவன் தமிழன். நெறியோடு கூடிய முறையான வாழ்வை வாழ்ந்த தமிழரின் மானம் புறநானூற்றுப் புலவர்களால் எவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது என்பதனைக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

**மானம்**

தமிழரின் பண்பாடு உலகம் போற்றும் தன்மையது. தமிழரின் உயரிய பண்பாட்டு நெறிகள் பல உண்டு. அவற்றுள் மானமும் ஒன்று. தமிழர்கள் மானம் பெரிதென்றெண்ணி வாழ்ந்தார்கள். மயிர் நீப்பின் உயிர்வாழா கவரிமான் சாதி என்று தமிழரின் மானம் சிறப்பிக்கப்பட்டது. உடம்பை நோக்க உயிர் பெரிது. உயிரை நோக்க மானம் பெரிது, வள்ளுவப் பெருந்தகை ஒழுக்கம் உயிரைப் போன்றது என்றார். மானம் உயிரைவிட மேலானது. "தன்னிலையில் தாழாமை தாழ்ந்தபின் உயிர் வாழாமை என்று பரிமேலழகர் மானம் என்பதற்கு விளக்கம் அளிப்பார். இத்தகு மானம் உயர்வான ஒன்றாகத் தமிழனால் மதிக்கப்பட்டது.

## மானம் பெரிது உயிர் சிறிது

சோழமன்னன் கோச்செங்கணானிடம் தோற்ற சேரமான் கணைக்கால் இரும்பொறை குடவாயிற் கோட்டத்துச் சிறையில் அடைக்கப்பட்டான். இம்மன்னன் நீர் வேட்கையால் தண்ணீர் கேட்க இவரை ஓர் அரசன் என்று மதியாமல் காலம் தாழ்த்திச் சிறைக்காவலர்கள் தண்ணீர் தந்தனர். அப்போது அவ்வேந்தன் தன்னிலை தாழ்ந்தமையை அறிந்து வருந்தினான். மன்னர் குலத்தில் குழந்தை கருவிலே இறந்து பிறந்தாலும் தசைப் பிண்டமாகப் பிறந்தாலும் அதனை வாளால் வெட்டிப் புதைப்பர். தான் இறந்து போகாது சிறைப்பட்டதையும், தன்னை மதிக்காததையும் எண்ணி வருந்திய நிலையில் இப்பாடலைப் பாடி சேரவேந்தன் தன்மானம் கருதி உயிர்விட்ட நிலைதனை உலகில் வேறெங்கிலும் காண இயலாது. இச்சூழ்நிலையில் அவ்வேந்தன் பாடிய பாடல்,

"குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்
ஆள் அன்று என்று வாளின் தப்பார்
தொடர்படு ஞமலியின் இடர்ப்படுத்து இரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை இன்றி வயிற்றுத் தீத் தணியத்
தாம் இரந்து உண்ணும் அளவை
ஈன்ம ரோ இவ் உலகத் தானே? (புறம்–74)

மானத்தினைப் பெரிதென எண்ணி வாழும் மன்னனின் குடையின் கீழ் வாழும் மக்கள் மன்னனைப் போலவே மானம் பெரிதென வாழ்ந்திருப்பார்கள்.

"மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி"

என்ற கூற்றின் மூலம் நிரூபணமாகின்றது.

கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதியின் பாடல் ஒன்று,

"புகழ் எனின் உயிரும் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்"

(புறம்–182)

உலகம் முழுவதையும் ஆள்வதாயினும் சான்றோர்கள் மானம் போகும் பழிச்செயலைச் செய்ய மாட்டார்கள். இவ்வுலகம் நிலைபெற்று இருப்பது கூட இப்படிப்பட்ட உயர்வோர்கள் இப்புவியில் வாழ்வதால்தான் என்று விளக்குகிறது இவ்வேந்தனின் இப்பாடல்.

இரு பெரும் வேந்தர்களும் போர் புரியும் போர்க்களத்தில் போர் தர்மங்களையும், போர் நெறிகளையும் கடைப்பிடித்து போர்புரிந்தார்கள். போரில் விழுப்புண்படுதல் பெரும் சிறப்பாகக் கருதப்பட்டது. அதே நிலையில் புறப்புண்படுதல் அவமானமாகக் கருதப்பட்டது.

"வாள் வாய்த்த வடுவாழ் யாக்கைக்
கேள் கண்டு கலுழ்ந்து வந்தன்று" - (பு.வெ.தும்பை25)

போர்க்களத்தில் வாளால் உண்டான புண்மிக்க உடலை உடைய கணவனைப் பார்த்து மனைவி மகிழ்ந்து கண்ணீர் வடித்த நிகழ்வு தன் கணவன் போரிலே வீரமரணம் அடைந்திருக்கின்றான் என்பதனை உணர்த்துவதுடன் அது அவனின் மானத்துடன் தொடர்புடையது என்பதனையும் விளக்குவதாக அமைந்துள்ளது. இவ்விலக்கணத்தை மேலும் மெய்மையாக்கும் வெண்ணிகுயத்தியார் புறப்பாடல் ஒன்று,

"வளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளிதொழில் ஆண்ட உரவோன் மருக
களி இயல் யானைக் கரிகால் வளவ!
சென்று அமர்க் கடந்த நின் ஆற்றல் தோன்ற
வென்றோய் நின்னினும் நல்லன் அன்றே
கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை
மிகப்புகழ் உலகம் எய்தி
புறப்புண் நாணி வடக்கிருந்தோனே"

(புறம்–66)

வெண்ணிப்பரந்தலை என்ற இடத்தில் சோழப் பேரரசன் கரிகாற் பெருவளத்தானுக்கும், சேரமான் பெருஞ்சேரலாதனுக்கும் நடந்த போரில் புறப்புண்பட்ட சேரமன்னன் வடக்கிருந்து உயிர் துறந்தான். சோழனே! காற்றை ஏவல்கொண்டு கலம் செலுத்தி போரில் வெற்றிபெற்ற உன்னைக் காட்டிலும், உயிர் துறந்த சேரவேந்தன் உயர்ந்தோன் அன்றோ? என்ற கூற்றின் மூலம் மானம் பெரிதென்று நாணி உயிர் துறந்த செயல் போற்றப்படுவதன் மூலம் தமிழன் மானத்தினை எவ்வளவு உயர்வாகக் கருதினான் என்பது விளங்குகிறது.

**முடிவுரை**

"மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர் நீப்பர் மானம் வரின்"

என்ற வள்ளுவனின் வாக்கிற்கு ஏற்ப மானம் பெரிதென்று எண்ணி ஓர் அவமானம் வரின் உயிரைத் துச்சமாக எண்ணி கவரிமான் பரம்பரையைச் சார்ந்தவர்களாக தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்பதற்கு அடையாளமாக வேந்தர்களின் செயல்கள் புறநானூற்றில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. இது வேந்தர்களின் செயலாயினும் ஒட்டுமொத்த தமிழரின் செயலாகும். மன்னனைக் கடைப்பிடித்து வாழ்ந்து வந்தவர்கள் ஆதித்தமிழர்கள்.

பார்வை நூல்கள்

1. புறநானூறு கழக வெளியீடு
2. புறப்பொருள் வெண்பாமாலை கழக வெளியீடு
3. திருக்குறள் பரிமேலழகர் உரை



# வள்ளலும் ஒரு கொள்ளைக்காரரே!

நாவுக்கரசர், முனைவர்.சோ.சத்தியசீலன்

வள்ளல் இராமலிங்க அடிகள் ஒரு கவிஞராய், நூலாசிரியராய், உரையாசிரியராய், போதகாசிரியராய், தத்துவ ஞானியாய், அருளாளராய் இந்த மண்ணில் வாழ்ந்தவர். மற்ற தத்துவ ஞானிகளிடமிருந்து முற்றிலும் வேறுபட்டவர் வள்ளலார்.

உலகில் அவதரித்த எந்தத் தத்துவ ஞானியும் வெளிப்படையாகத் தன்னுடைய குறிக்கோளை அறிவித்ததில்லை. ஆனால் வள்ளலார் இந்த மண்ணுலகில், தான் தோன்றிய காரணத்தை வெளிப்படையாக அறிவிக்கின்றார்.

மனித இனம் உள்ளத்தில் அழுக்கை வைத்துக்கொண்டு புறத்தில் வெள்ளையாக நடமாடுவதைக் கண்டு வருந்தினார். மனிதர்களைத் திருத்தி, அவர்களைச் சன்மார்க்க சங்கத்தில் இணைத்து, இந்த உலகத்திலேயே மறுமை இன்ப வாழ்வை அடையச் செய்வதே தன்னுடைய நோக்கம் என்று கூறுகின்றார்.

இந்தச் செய்தியைப் பின்வரும் அழகிய பாடலில் விளக்குகின்றார்.

"அகத்தே கறுத்துப் புறத்துவெளுத் திருந்த உலகர் அனைவரையும்
சகத்தே திருத்திச் சன்மார்க்க சங்கத் தடைவித் திடஅவரும்
இகத்தே பரத்தைப் பெற்றுமகிழ்ந் திடுதற் கென்றே எனை இந்த
உகத்தே இறைவன் வருவிக்க உற்றேன் அருளைப் பெற்றேனே".

குறிக்கோளைக் கூறிய வள்ளலார் தான் யார் என்பதையும் கூறத் தவறவில்லை. இந்த மண்ணில் அவதரித்த அடியார்களின் வழிவந்த ஒருவர் என்பதை அழகாகக் கூறுகின்றார். தனக்கு முன் வாழ்ந்த ஞானிகள் கூறிய வாழ்வியல் தத்துவங்களைத்தான் தானும் கூறுவதாக வெளிப்படையாக ஒத்துக் கொள்கிறார். ஒரு பாடலில்,

"வாழையடி வாழைஎன வந்ததிருக் கூட்ட
மரபினில்யான் ஒருவன்அன்றோ வகைஅறியேன்"

என்பது அவர் வாக்கு. இப்பாடலில் "வகை அறியேன்" என்று கூறும் அவருடைய உள்ளத்தை ஆழ்ந்து நோக்கினால் ஓர் அரிய உண்மை நமக்குப் புலப்படும்.

''சங்கப் புலவர்களும், திருவள்ளுவரும் காவிய கர்த்தாக்களும், தேவார மூவரும், மணிவாசகரும், திருமூலரும் இன்னும் பட்டினத்தார் போன்ற கவிஞர்களும் அருளாளர்களும் கூறிச் சென்ற தத்துவங்களைத்தான் நானும் கூறுகின்றேன். சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும், அன்பையும், அருளையும், ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமையையும், உயிர் இரக்கத்தையும், அவர்களுடைய வழியில் நின்றுதான் நான் பேசுகின்றேன். ஆனால் அவற்றை நடைமுறைப்படுத்தும் வகையைத்தான் என்னால் அறிந்துகொள்ள இயலவில்லை" என்பதை "வகைஅறியேன்" என்னும் சொற்றொடரில் கூறுகின்றார். அந்த வகையைத்தான் இறைவனிடம் வேண்டி, உள்ளுணர்வால் பெற்றார் வள்ளலார்.

வள்ளலார் மானுட உலகத்திற்குக் கூறும் சன்மார்க்கத்தை ஆறு படிநிலைகளாக நமக்குப் பகுத்து வழங்குகிறார். அவற்றுள் முதல் நான்கும் நம்மால் பின்பற்றப்பட வேண்டியவை. மற்ற இரண்டும் மேல் நிலைகளில், அதாவது, யோக நிலையில் நமக்குத் தானே வாய்க்கும் பேறுகள் :

1. இந்திரிய ஒழுக்கம்
2. கரண ஒழுக்கம்
3. ஜீவ ஒழுக்கம்
4. ஆன்ம ஒழுக்கம்
5. தத்துவ நிக்ரகம் செய்தல்
6. கடவுள் நிலை அறிந்து அம்மயமாதல்

**1. இந்திரிய ஒழுக்கம்**

உடலால் தூய்மையாக இருந்தல். கொடுஞ்சொற்கள் பேசாமலும், கொடுமையாகப் பாராமலும், தீயனவற்றைக் கேளாமலும், பிறர் குற்றம் விசாரியாமலும் இருத்தல் இந்திரிய ஒழுக்கமாகும்.

**2. கரண ஒழுக்கம்**

காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் ஆகியவற்றை விலக்கி, மனத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ளுதலே கரண ஒழுக்கம்.

### 3. ஜீவ ஒழுக்கம்

எல்லா உயிர்களையும் தம்முயிர் போல் எண்ணி அவற்றிற்கு வரும் துன்பங்களை எவ்வாறேனும் போக்குதல் ஜீவ ஒழுக்கமாகும்.

### 4. ஆன்ம ஒழுக்கம்

எல்லா உயிர்களையும் இறைவனுடைய திருக் கோயில்களாகக் கருதி அவற்றின் உள்ளொளியையே இறைவனாக வணங்குதல் ஆன்ம ஒழுக்கமாகும்.

இவற்றை அடுத்த தத்துவ நிக்ரகம் செய்தலும், கடவுள் நிலை அறிந்து அம்மயமாதலும் தாமே கைகூடும்.

வள்ளலார் வகுத்த ஆன்மிக வாழ்வியல் தத்துவங்கள் இவைதான்.

இவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு உரிய சாதனங்களையும் வள்ளலார் வகுத்துத் தந்துள்ளார். இந்த வகையில்தான் இந்தியாவில் மட்டுமின்றி உலகெங்கும் தோன்றிய தத்துவ ஞானிகளிடமிருந்து வள்ளலார் முற்றிலும் வேறுபடுகின்றார். மற்ற ஞானிகளெல்லாம் தத்துவங்களைக் கூறிச் சென்றார்களே தவிர அவற்றை நடைமுறைப்படுத்துவதற்குரிய சாதனங்களைத் தரவில்லை.

இந்திரிய ஒழுக்கத்தை நடைமுறைப்படுத்துவதற்கு “சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்” என்னும் அடியார் திருக்கூட்டத்தை உருவாக்கினார். சங்கத்தில் இருந்தால் நம்முடைய புலன்கள் தூய்மையான நெறியிலேயே செல்லும்.

கரண ஒழுக்கம் நிறைவேற நமக்குத் திருஅருட்பா என்னும் அருமையான அருள் நூலை தந்துள்ளார். அந்த நூலைப் படிக்கப் படிக்க நம் உள்ளம் தூய்மை பெறும். இது கரண ஒழுக்கத்திற்குத் துணை புரியும் சாதனம் ஆகும்.

உயிர்களுக்கு வரும் துன்பங்களிலெல்லாம் பெரிய துன்பம் பசித்துன்பம் தான். அதனைப் போக்குவதே ஜீவ ஒழுக்கமாகும்.

நண்பர்களே, நெருப்பை நெருப்பால் அணைக்கும் அதிசயத்தை நீங்கள் கண்டதுண்டா? வள்ளலார் அதனைச் சாதித்துள்ளார்.

உயிர்களுக்கு வரும் பசி என்னும் நெருப்பை சத்திய தருமச்சாலையின் அடுப்பு நெருப்பால் அணைத்த வித்தகர்தான் வள்ளலார். இதுதான் ஜீவ ஒழுக்கத்தை நடைமுறைப்படுத்தும் சாதனமாகும்.

வடலூரில் வள்ளலார் அமைத்த சத்திய ஞான சபை ஆன்ம ஒழுக்கத்தை நடைமுறைப்படுத்தும் அடையாளச் சாதனமாகும். நம் உள்ளத்தில் உள்ள மாயா திரைகளை அகற்றி, எல்லா உயிர்களிலும் குடி கொண்டுள்ள சோதியாகிய இறைவனைக் காண்பதற்குச் சத்திய ஞான சபையே சாதனமாய் அமைகிறது.

இப்படி நான்கு வகை ஒழுக்கங்களையும் நடைமுறைப்படுத்த சாதனங்களை நமக்குத் தந்தவர் வள்ளலார். மற்ற அருளாளர்களெல்லாம் இறைவனைப் பாடுவதிலும், அவன் திருவடிகளை அடைவதிலும் ஆர்வம் காட்டினர். ஆனால் வள்ளலாரோ அவர்களிடமிருந்து, தம்முடைய குறிக்கோளில் முற்றிலும் வேறுபட்டு நிற்கின்றார்.

இந்த உலகத்து உயிர்களின் துன்பங்களை நீக்கிட இங்கேயே இருக்க விரும்புகிறார்.

"எவ்வுயிர்த் திரளும் என்னுயிர் எனவே எண்ணிநல்
இன்புறச் செய்யவும்
அவ்வுயிர் களுக்கு வரும்இடை யூற்றை அகற்றியே
அச்சநீக் கிடவும்
செவ்வையுற் றுனது திருப்பதம் பாடிச் சிவசிவ என்று
கூத்தாடி
ஒவ்வுறு களிப்பால் அழிவுறா திங்கே ஓங்கவும்
இச்சைகாண் எந்தாய்"

இந்த லட்சியத்தை அடைய, "மானம் எல்லாம் போனவழி விடுத்தேன். மனம் கோணேன். என்னை வைதாலும் வைதிடுமின். வாழ்த்து எனக் கொண்டிடுவேன்" என்று கூறும் வள்ளலார் நம் உள்ளத்தைத் தன்னுடைய அருள் உணர்வால் கொள்ளை கொள்ளுகின்றார். அவர் ஒரு புதுமையான கொள்ளைக்காரர் அல்லவா!

**▲**

# மு.இராகவையங்காரின் செந்தமிழ்ப்பணி

முனைவர். ம.சா.அறிவுடைநம்பி

இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய தமிழ் அறிஞர் பெருமக்களுள் மு.இராகவையங்காரும் ஒருவர். தமிழறிஞராக, இலக்கிய ஆசிரியராக, கவிஞராக விளங்கிய பெருமை இவருக்கு உண்டு. பாண்டித்துரைத் தேவர்களால் 1902–ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட 'செந்தமிழ்' இதழின் பதிப்பாசிரியராக 1906–ஆம் ஆண்டு முதல் 1910–ஆம் ஆண்டு வரை இருந்து பல்வேறு பணிகளைச் செய்துள்ளார்.

தமிழ்க் கல்வியைப் பரப்புவதற்காகவும், மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் செய்திகளை வெளியிடுவதற்காகவும் தொடங்கப்பட்ட 'செந்தமிழ்' எனும் திங்களிதழின் முதல் பதிப்பாசிரியராக இரா.இராகவையங்கார் 1902 முதல் 1906 வரை இருந்தார். இவருக்கு உறுதுணையாகத் துணைப் பதிப்பாசிரியராக அன்னாரின் மருமகனான மு.இராகவையங்கார் இருந்தார். "தமிழ்க் கல்வியிலும் தமிழாராய்ச்சியிலும் பேரவாக்கொண்ட தமிழ் மக்கட்கு உறுதுணையாய் நின்றது செந்தமிழ்ப் பத்திரிகையேயாம். ஒவ்வொரு மாதத்துப் பத்திரிகையிலும் அதுவரை அறியாத அரிய விஷயங்கள் குறித்துச் சிறந்த கட்டுரைகள் பல வெளிவந்து கொண்டேயிருந்தன. பத்திராசிரியர் எழுதியனவெல்லாம் தமிழ்மணமும் ஆராய்ச்சி நலமும் செறிந்து விளங்கின; கற்பார்க்குப் பெருவிருந்தாயமைந்தன. ஒவ்வொரு மாதமும் செந்தமிழ் எப்போது வெளிவருமென்று பேராவலோடு தமிழன்பர்கள் எதிர்பார்த்த வண்ணமாயிருந்தார்கள். தமிழ் நாட்டுப் பெரும் பேராசிரியனாயமைந்து, தமிழ்மக்கள் வீடுதொறுஞ் சென்று, தமிழ்க்கல்வி நலத்தை அவர்கள் நுகரும்படி செய்துவந்த பெருமை செந்தமிழ்ப் பத்திரிகைக்கே உரியதாயிருந்தது. இப்பத்திரிகையின் உயிர் நிலையாயிருந்தவர் மு.இராகவையங்காரவர்களே. "பலர் சிறந்த தமிழறிஞர்களாக விளங்குவதற்கும், அறிவுநலமிக்க பலர் தமிழாராய்ச்சியை மேற்கொள்ளுதற்கும் அவரே காரணமாயிருந்தார்" என்று ச.வையாபுரிப்பிள்ளை 'தமிழ்ச்சுடர் மணிகள்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். அது இங்கு நினைவுகூரத்தக்கது.

'செந்தமிழ்' இதழில் இவர் ஆசிரியராக இருந்த காலத்தில் இலக்கியம், இலக்கணம், வரலாறு, மூலபாடம் ஆகிய தலைப்புகளில் 53 கட்டுரைகள் இவரால் எழுதப்பட்டு வெளிவந்துள்ளன. இக்கட்டுரைகளுள் சில பல்வேறு விவாதங்களுக்கு இடந்தந்தும், சில மறுப்பதற்கென்றும் எழுதப்பட்டன. மறுப்பதற்குத் தகுந்த காரணங்கள் பலவற்றைச் சான்றுகளுடன் மு.இராகவையங்கார் தம் கட்டுரைகளில் தருகிறார். சேரவேந்தர் தாயவழக்கு, சேரநாட்டின் தலைநகரம் வஞ்சியா? கரூரா? என்ற இவ்விரண்டும் பற்றி இவரும், நாவலர் ச.சோமசுந்தர பாரதியாரும் எழுதிய கட்டுரைகள் ஆராய்ச்சிக்கு இடந்தந்து நின்றன.

சில கட்டுரைகள் எழுத நேர்ந்தமைக்குரிய காரணங்களைக் கட்டுரையின் தொடக்கத்தில் கூறும் பழக்கத்தை இவரிடம் காண முடிகிறது. பல கட்டுரைகளின் முன்னுரையில் அல்லது கட்டுரைத் தலைப்பில் இடுகுறியிட்டு அதன் அடிக்குறிப்பில் அக்கட்டுரை எழுத நேர்ந்ததற்கான காரணத்தைக் கூறுவதை மரபாகக் கொண்டிருப்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

'செந்தமிழ்' இதழில் தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாதய்யர் இறைவன் திருவடி நீழலடைந்த பொழுது பாடிய 12 கவிதைகளும், சேதுபதியின் 34ஆவது வெள்ளணி நாள் விழாவையொட்டிப் பாடிய 5 கவிதைகளும் இடம்பெற்றுள்ளன. இக்கவிதைகள் பாடியதன் மூலம் ஒரு கவிஞராகவும் விளங்கியதைக் காண முடிகிறது.

மதுரைத் தமிழ்ச் சங்கத்திலுள்ள நூல்களில் அருமையான சில நூல்களைப் பற்றிய சிறப்புச் செய்திகளை 'நூலாராய்ச்சி' எனும் தலைப்பில் எழுதியுள்ளார். "பூருரவா சரிதை" என்ற நூலைப் பற்றி சில குறிப்புகள் கூறிய ஐயங்கார், நூலாராய்ச்சியை எழுதும் முயற்சியைத் தொடராமல் விட்டுவிட்டார். இதற்குரிய காரணம் எதுவெனத் தெரியவில்லை.

'செந்தமிழ்' இதழின் பதிப்பாசிரியராக இருந்த காலத்தில் 'பத்திராசிரியர் குறிப்புகள்' எனும் தலைப்பில் நூல் பதிப்பிக்கும் பொழுது நூலுக்கு முன் பகுதியிலும், சிலர் எழுதிய கட்டுரைகளில் ஐயங்கள் ஏதாவது எழுமாயின் அவற்றைக் குறிப்பிட்டுச் சில விளக்கங்களையும் எழுதியிருக்கிறார்.

'புத்தகக் குறிப்புகள்' எனுந்தலைப்பில் அந்தக் காலத்தில் வெளிவந்த நூல்களைப் பற்றி மதிப்புரை எழுதியுள்ளார். நூலாசிரியரைப் பற்றியும், நூலைப்பற்றியும் பாராட்டிக் கூறுவதாகவே இம்மதிப்புரைகள் அமைந்துள்ளன. சில நூல்கள் அறிமுகம் மட்டும் செய்து வைக்கப்பட்டன. இவ்வாறு 62 நூல்களைப் பற்றிய குறிப்புகளை இப்பகுதியில் ஐயங்கார் எழுதியுள்ளார். ஒரு நூலைப் படித்து அதற்கு மதிப்புரை எவ்வாறு எழுத வேண்டும் என்ற நெறிமுறையை இவரெழுதிய மதிப்புரைகள் மூலம் அறிய முடிகிறது.

செந்தமிழ் இதழின் ஆசிரியராக இருந்த காலத்தில் இவர் பதிப்பித்த நூல்கள், பாடல்கள் பலப்பல. சிலவற்றுக்கு உரைக்குறிப்புகள் எழுதியுள்ளார். சிலவற்றை மூலத்துடன் பதிப்பித்துள்ளார். எல்லா நூலுக்கும் எழுதிய முன்னுரையில் தாம் அந்நூலைப் பதிப்பிக்க நேர்ந்த காரணத்தைக் கூறியுள்ளார்.

பெருந்தொகை (இரண்டு தொகுதிகள்), நிகண்டகராதி, திருக்குறள், பரிமேலழகர் உரை (கையடக்கப் பதிப்பு), நரி விருத்தம் (அரும்பதவுரையுடன்) போன்ற நூல்களைப் பதிப்பித்துள்ளார்.

ஏடுகளில் எழுதப்பட்ட பழந்தமிழ் நூல்களில் பாட வேறுபாடுகள் அமைவது உண்டு. உரையாசிரியர்கள் அவற்றுள் ஏற்புடையனவற்றைக் கொண்டு ஏலாதனவற்றை விலக்கி விடுவதுண்டு. அம்முறையில் ஐயங்கார் தாம் பதிப்பித்த நூல்களில் உள்ள பாடல்களில் காணப்படும் பாடவேறுபாடுகள் சிலவற்றை எடுத்துக்காட்டி விளக்கியுள்ளார். சான்றுக்குப் பெரியாழ்வார் திருமொழி முதற்பத்தில் காணப்படும்,

> "வண்ண மாடங்கள் சூழ்திருக் கோட்டியூர்
> கண்ணன் கேசவ நம்பி பிறந்தினில்
> எண்ணெய் சுண்ண மெதிரெ திர்தூவிடக்
> கண்ணன் முற்றங் கலந்தள றாயிற்றே" (1)
>
> "பேணிச் சீருடைப் பிள்ளை பிறந்தினில்
> காணத் தாம்புகு வார்புக்குப் போதுவார்" (3)

என்ற பாசுரங்களில் 'நம்பி பிறந்தினில்' 'பிள்ளை பிறந்தினில்' என்று வழங்கப்படுகின்றன. 'பிறந்தினில்' என்பதற்குப் பிறந்தபோது, பிறந்தவளவில் எனவும், 'பிறந்தவிதனில்' என்பதன் விகாரமாகவுமாம் எனவும் சிலர் பொருளுரைத்துள்ளனர். இதை,

'நம்பி பிறந்தீனில்', 'பிள்ளை பிறந்தீனில்'

என்று பாடங்கொள்வதே பொருந்தும். கண்ணன் அவதரித்த சூதிகாகிருதம் என்பது இங்கே பொருளாம். பிறந்த ஈனில் – பிறந்தீனில்; பிறந்தகம் என்பது போல, ஈன்இல்–பிரசவ வீடு, பிறந்த பிள்ளையைக் காணப்புகுவதற்கும், புக்குப்போதுதற்கும் பிரசவவீடு என்ற பொருளே மிகவும் ஏற்புடையதாகும். இப்பொருளில் குறுந்தொகை, பதினாராந்திருமுறை, திருக்கோவையார் முதலான நூல்களில் வழங்கப்படும் மேற்கோள்களை எடுத்துக்காட்டி விளக்கியுள்ளார்.

மு.இராகவையங்கார் தம் 24–ம் வயதில் முதன்முதல் செந்தமிழ் இதழ் மூலம் ஆய்வுப்பணியைத் தொடங்கி ஏறத்தாழ 58 ஆண்டுகள் வரை எழுத்துப் பணியைத் தம் மூச்சாகக் கொண்டிருந்தார். தமிழ் இலக்கிய வரலாற்றில் இவருக்கென்று ஓரிடம் இருப்பது வெள்ளிடைமலை. இன்றைய இளம் ஆய்வாளர்களுக்கு இவர் ஆய்வுப் போக்கு நெறிமுறைகள் பெரிதும் உறுதுணை புரியும்.

**நன்றி தினமணி (தமிழ்மணி)- 17.08.2008**

# பாரதிதாசன் பாடல்களில் மானுட நேயம்

(சென்ற மாத தொடர்ச்சி)

- டாக்டர் மா.இராமச்சந்திரன்

மனிதநேய உணர்வு மனிதனை முழுமையாகப் புரிந்து கொள்ள அவருக்குத் துணை செய்தது. அறிவை விரிவு செய்து, விசாலப் பார்வையால் மக்களை விழுங்கவைத்தது. மானிடம் என்பது மிகச் சிறந்தது. மானிடத்திற்கு ஈடு எதுவும் இல்லை என்பதை,

"மானிடம் என்பது புல்லோ? -- அன்றி
மரக்கட்டை யைக்குறித் திடவந்த சொல்லோ
கானிடை வாழ்ந்ததும் உண்டு - பின்பு
கடலை வசப்படச் செய்ததும் அதுதான்" (பா.க.,ப.121)

என்று பாட வைத்தது. அது மட்டுமா?

"மானிடம் போற்ற மறுக்கும் - ஒரு
மானிடம் தன்னைத்தன் உயிரும் வெறுக்கும்"

(பா.க.,ப.121)

என்று ஒலிக்கச் செய்தது. மனிதனையும் மானிட சக்தியையும் உணர்ந்த பாரதிதாசன் பார்க்கின்ற எதிலும் அதைக் காணத் தொடங்கினார். இதனால் தான் மயிலைப் பற்றிப் பாடும்போது கூட,

"புவிக்கொன் றுரைப்பேன், புருஷர் கூட்டம்
பெண்களை ஆதிப் பெருநாள் தொடங்கி
திருந்தா வகையிற் செலுத்தலால் அவர்கள்
சுருங்கிய உள்ளம் விரிந்தபா டில்லையே" (பா.க.,ப.52)

என்று மனித நேயம் குழைத்துப் பாடினார். இதனால் தான் "அனைத்துத் துறைகளிலும் அவரிடம் ஆதிக்கம் பெற்ற அருமையான துறை சமுதாயச் சீர்திருத்தம்தான்,"[6] என்று புகழவைத்தது.

பாரதிதாசனிடம் மலர்ந்த மனித நேயத்தை,

1. அரசியல்நிலை மானுடநேயம்
2. பொருளியல்நிலை மானுடநேயம்
3. சமூகநிலை மானுடநேயம்

என்று மூன்று வகைப்படுத்திக் காணலாம்.

### 1. அரசியல்நிலை மானுட நேயம்

மக்கள் நலம் பேண எழுந்த அமைப்பு அரசியல் ஆகும். அரசியலின் ஆதிக்கநிலை ஆட்சியானது, பொதுமக்களுக்குத் தொண்டு செய்யும் ஆட்சியே உயர்ந்ததாகும். ஏனெனில் அத்தகு ஆட்சியில் தான் மக்கள் அச்சம் இன்றி வாழமுடியும்.

"அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மானம் உடைய தரசு?[7] - (குறள் 384)

என்று வள்ளுவர் ஆட்சிக்கு இலக்கணம் கூறுவார். சங்ககால மன்னர்களின் ஆட்சிமுறையிலும் இதைக் காணமுடிகின்றது.

"குடிபுர வுண்டுங் கொடுங்கோ லஞ்சி
மன்பதை தாக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்ப மல்லது தொழுதக வில்லென."[8]

(சிலம்பு: காட்சி–102–104)

சேரன் செங்குட்டுவன் மொழிவது இதனை உறுதிப்படுத்தும். இத்தகைய ஆட்சியையே பாரதிதாசன் விரும்பினார்.

மக்கள் நலம் பேணும் மக்களாட்சி அமைவதில் பாரதிதாசன் மிகுந்த விருப்புடன் செயல்பட்டு இருக்கின்றார். இந்திய நாட்டு மக்கள் ஆங்கிலேயருக்கு அடிமையாகி அல்லற்படுவதை அவர் விரும்பவில்லை. அவர்கள் சிட்டுக் குருவியைப்போல் சுதந்திரமாக வாழ வேண்டும் என்று எண்ணுகிறார். சுதந்திரமடைதல் உயிரியற்கை என்பதை உணர்த்த விரும்புகின்றார். இதை அவர் நாய்ப் பாட்டாகப் பாடுகின்றார்.

மெத்தைவீட்டு நாய் வெள்ளை. தெருநாய் கருப்பு. ஒரு நாள் வீட்டுநாய் வாசலில் வந்து தெருநாயை அழைக்கிறது. தெருநாய் அருகில் செல்கின்றது. வீட்டு நாயைப் பார்த்து, "உனக்கு என்ன உணவு கிடைக்கும்"? என்று தெருநாய் கேட்கிறது. உடனே வீட்டுநாய், "பாற் சாதம், அப்பம், ரொட்டி, நவநீதம் முதலியன கிடைக்கும். பட்டு மெத்தையில் தூங்குவேன். நீயும் என்னுடன் வந்துவிடு" என்கிறது. தெருநாய் வீட்டுநாயைப் பார்த்து, "உன் கழுத்தில் வடுபோல உள்ளதே, அது என்ன"? என்று கேட்கிறது "அதுவா என் கழுத்து நையாமல் காதோரத்தில் வார் கொண்டு கட்டி வைப்பர் அந்த அடையாளம்" என்கிறது. உடனே தெருநாய்,

"அடிமை யாய்நீ இருப்பதேன்!
கதிதான் கெடநீ நடப்பதா!
கட்டுப்பட்டுக் கிடப்பதா?
சதிராய் உன்னிடம் அண்டேனே." – (பா.க.ப.582)

என்று கூறி ஓடிவிடுகின்றது. இதனைப் போல காட்டுக்கோழி வீட்டுக்கோழியிடம்,

என்றன் முதுகில் ஏறு
. துன்பமில்லாத விடுதலை தோயவே"

(வீட்டுக்கோழியும் காட்டுக்கோழியும் பா.க.பா.531)

என்று கூறுகின்றது. நாயும் – கோழியும் துன்பமில்லாத விடுதலையை விரும்புவதைக் காட்டுவதன் மூலம் மனிதர்களும் விடுதலையான இன்ப வாழ்வைப் பெறவேண்டும் என்னும் தம் உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்துகின்றார். இதையே,

"சொத்தெமக்கு நல்ல சுதந்திரந்தான் என்றுரைப்பீர்"

(பா.க.,ப.581)

என்று தேசிய உபாத்தியாயர் பிள்ளைகளுக்கு உரைக்கின்றார். சொத்து, சுகத்தை விரும்பும் தமிழர்களின் மனநிலையை உணர்ந்து மிகப் பெரிய சொத்து என்பதே சுதந்திரம்தான் என்று மொழிகின்றார்.

விடுதலை பெற்ற மனிதனே மேன்மையானவன் என்று பாரதிதாசன் கருதுகின்றார். "சுதந்திரம் அமரத்தன்மை" என்ற பாடலில் தேவர்கள் யார்? என்று வினா வெழுப்பி,

"சுதந்திரம் பெற்றவர் எவ்வெவ ரேனும்
அன்னவர் தேவர்களாவர் - அஃ
தற்றவர் யாரும் வாடும் புழுக்கள்"

என்று விடையளிக்கின்றார். இவ்வளவு உன்னதமான சுதந்திரப் பதவி நம் மக்களுக்குக் கிடைக்கவில்லை என்றும் மனங்கலங்குகின்றார். மேலும் பாரதிதாசன் எல்லோரையும் பதவியில் அமர்த்த எண்ணுகின்றார். எல்லோருக்கும் பதவி கொடுக்க முடியுமா? என்று வினவலாம். பாரதிதாசன் ஒரு பதவி அல்ல, மூன்று பதவி கொடுக்க விரும்புகிறார். அதைத்தான்,

"சுதந்திரம் சமத்துவம் சகோதரத் துவமெனும்
இதந்தரு பதவி எவர்க்கும் வேண்டும்"[10]

என்கிறார். இந்நாட்டில் எல்லோரும் அடிமையில்லா இன்பவாழ்வு வாழவேண்டும் என்ற கவிஞரின் ஆதங்கம் இவ்வரிகளில் வெளிப்படுகிறது.

**குடியாட்சி**

அந்நியர் ஆட்சிமாறி அரசியல் விடுதலை பெறும்போது நமக்கு எத்தகைய ஆட்சி இருக்கவேண்டும் என்று பாரதிதாசன் எண்ணிப்பார்க்கிறார். மக்கள் அச்சமகற்றி நிறைவான வாழ்வைக் குடியாட்சியில் தான் பெறமுடியும் என்ற முடிவுக்கு வருகின்றார். அதனால் மக்கள் நலம்பேணும் மக்களாட்சி அமைய வேண்டும் என்று அவர் விரும்புகிறார். அக்குடியாட்சியை வீரத்தாய் நாடகத்தில் வரும் சுதர்மனைக் கொண்டே,

"இந்த மணிபுரிதான் இங்குள்ள மக்களுக்குச்
சொந்த உடைமை! சுதந்திரர்கள் எல்லோரும்
ஆதலினால் இந்த அழகு மணிபுரியை
ஓதும் குடியரசுக் குட்படுத்த வேண்டுகிறேன்"

என்று பிரகடனம் செய்கின்றார். "சௌம்யன்" என்ற நாடகத்தில் வரும் சௌம்யன் தன் மகுடத்தைக் கழற்றி "இதைப் பொது மக்களின் பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன்! ஆளுவோரும் ஆட்படுவோரும் மக்கள்" என்று கூறித் தரையில் எறிகின்றான். பொதுமக்கள் காலடியில் ஆட்சியைச் சமர்ப்பணம் செய்யும் தன்மையை இங்குக் காணமுடிகின்றது.

"புரட்சிக் கவியில்" வரும் பொதுமக்கள் கவிஞனுக்கும், இளவரசிக்கும் அரசன் இழைக்கும் கொடுமையைப் பார்த்துக்கொண்டு வீணேநிற்கின்றனர். அவர்களின் உணர்ச்சியைத் தட்டி எழுப்ப நினைத்த கவிஞன் உதாரன்.

அரசன் மகள் தன்நாளில் குடிகட் கெல்லாம்
ஆளுநிலை பொதுவாக்க நினைத்திருந்தாள்
(பா.க.,ப.34)

என்று கூறுகின்றான். இந்த அறிவிப்பைக் கேட்ட மக்கள் ஆர்த்தெழுகின்றனர். அரசனின் கொட்டத்தை அடக்குகின்றனர்.

நிர்வாக அமைப்பான குடியாட்சி என்பது யாரோ சிலருக்குப் பதவி தரும் அட்சயப் பாத்திரமாக இருக்கக் கூடாது. பொதுமக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்துதரும் பொறுப்பு மிக்க நிர்வாக அமைப்பாக இருக்க வேண்டும் என்பது பாரதிதாசனின் கொள்கை. குடியாட்சியின் கொள்கையாக,

“நிமிஷந்தோறும் மக்களைக் கல்வி கேள்விகளில்
உயர்த்துவோம் கல்வியின் ஒளிமக்கள்பால் பரவும்
அது அக்ரமம் செய்யும் மனிதனுக்கு அறிவு
கொளுத்தும். – (சௌம்யன், காட்சி 3அ)

என்று குருசந்த்ரசேனர் மூலம் தெளிவுபடுத்துகிறார். குடிமக்களின் நலன் பேணும் குடியாட்சியை மலரச் செய்து மக்களை முன்னேற்ற எண்ணும் பாரதிதாசனின் மனித நேயம் இதனால் புலப்படுகின்றது.

**பொருளியல் நிலை மானுடநேயம்**

மனித வாழ்வுக்கு இன்றியமையாதது பொருள். மனிதனின் வாழ்க்கைத் தரத்தை நிர்ணயிக்கும் காரணியாக அவனது பொருளாதாரம்தான் அமைகின்றது. “பணம் பத்தும் செய்யும், “பணம் பாதாளம் மட்டும் பாயும்”, “பணம் இல்லாதவன் பிணம்” என்ற வழக்கு மொழிகள் பணம் மனிதனிடம் செலுத்தும் ஆதிக்கத்தை உணர்த்துவனவாக அமைகின்றன.

“பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்லது இல்லை பொருள்” – (குறள்–751)

என்னும் குறளும் பொருளின் இன்றியமையாமையைக் காட்டும் பொருளாசை கொண்டோர் பெருகிப் பொருளைச் சேர்த்து வைக்கும் பழக்கம் மிகுந்ததால் இருப்போர், இல்லாதார் என்னும் வர்க்க பேதம் உண்டானது. பணக்காரன், ஏழை என்ற பேதம் சமுதாயத்தில் பல முரண்களுக்குக் காரணமாக அமைந்தது. இந்நிலை மாறவேண்டுமானால் பொருளாதாரச் சமத்துவம் ஏற்பட வேண்டும் என்று காந்தியடிகள் எண்ணினார். நாட்டு முன்னேற்றத்திற்கு அவர் வகுத்த நிர்மாணத்திட்டங்களில் பொருளாதாரச் சமத்துவம் என்பதையும் சேர்த்தார்.

"தேசத்தின் செல்வத்தில் பெரும்பகுதி சிலரிடத்தில் மட்டும் குவிந்திருக்கிறது ஆனால் கோடிக்கணக் கான மக்கள் உண்ணவும் உடுக்கவும் வகையில்லாது அவதியுறுகிறார்கள். பொருளாதார சமத்துவம் என்றால் ஒருபுறம் இவ்விதம் குவிந்த செல்வத்தைக் கரைப்பதும் மறுபுறம் மேற்சொன்ன அவதியைப் போக்கி மக்களை உயர்த்துவதுமே யாகும்"12

என்று காந்தியடிகள் பொருளாதாரச் சமத்துவம் பற்றிக் குறிப்பிடுவார். பொருளாதாரச் சமத்துவம் பெறும் வகையில் பாரதிதாசன் பொருளியல் பிரச்சினைகளை மனித நேயத்தோடு அலசுவதைக் காணமுடிகிறது. பொருளை வர்க்க முரண்பாட்டுக் காரணியாகவே பார்க்கும் பார்வையைப் பாரதிதாசனிடம் காணமுடிகிறது.

பாரதிதாசனின் பொருளியல்நிலை மானுடநேயத்தை ஏழ்மையும் குமுறலும், சுரண்டல் ஒழிப்பு, பொதுவுடைமையாக்கம், தொழிலும் தொழிலாளரும், வணிகம் என்னும் ஐந்து நிலைகளில் காணலாம்.

**ஏழ்மையும் குமுறலும்**

உழைக்கின்ற மக்கள் பொருளாதாரத்தில் நலிவடைந்து வாடுவதைக் காணும் பாரதிதாசன் மனம் குமுறுகிறது. உழைக்கும் மக்கள் உடைமையின்மையால் வாடுகின்றனர். அவர்கள் வாழ்விலே சேர்வதெல்லாம் கடனாகத்தான் உள்ளது. பொருளின்றி நித்தியத் தரித்திரர்களாகத் திரிகின்றனர். இவ்வாறு,

"செல்வம் முற்பிறப்பிற் செய்தநல் வினைப்பயன்"

(பா.க.,ப.332)

என்று ஆதிக்க வர்க்கம் விடும் கரடியை எதிர்க்கிறார். நாளைக்கு என்னவழி என்று தெரியாது தவிக்கின்றவர்களும் இருக்கின்றார்கள் என்பதை,

"இந்நாள் உண்டு பின்னால் இலை எனும்
வறுமை எமக்கு வளமை உமக்கோ"

என்று பாரதிதாசன் குறிப்பிடுகிறார். நாளெல்லாம் உழைக்கும் மக்கள் பட்டினியில் வாடுவதைக் கண்டு,

"பாடுபட்டீர்கள் பருக்கையில் லாதொரு
பட்டினியில் மாடென வாழ்கின்றீர்" - (பா.க.,ப.131)

என்று சாடுகின்றார். உழைத்து உழைத்து உரங்கொண்ட மக்கள் ஒன்றுமில்லாமல் வாடுவதை,

"கந்தை யணிந்தோம் - இரு
கையை விரித்தெங்கள் மெய்யினைப் போர்ந்தோம்
மொந்தையிற் கூழைப் - பலர்
மொய்த்துக் குடித்துப் பசித்துக் கிடந்தோம்
சந்தையில் மாடாய் - யாம்
சந்ததம் தங்கிட வீடுமில்லாமல்
சிந்தைமெலிந்தோம் - எங்கள்
சேவைக் கெலாம்இது செய்நன்றி தானோ"

(தொழிலாளர் விண்ணப்பம்)

என்று அவர்கள் வாயாலேயே வெளிப்படுத்துகின்றார்.

உழைத்தும் பொருளில்லாத ஏழைகளின் நிலையுயர வேண்டுமானால் உடைமையாவும் அரசுக்கேயாக வேண்டும் என்று பாரதிதாசன் எண்ணுகின்றார். கடன் தொல்லையால் உடல் நொந்து மதிமயங்கி இறக்கும் நிலையில் உள்ள ஒருவனிடம்,

"மதிவந்து விட்டதண்ணே நமதுசர்க் காருக்கு
மக்களுக்குப் புவிப்பொருள்கள் பொதுவென்று சர்க்கார்
பதிந்துவிட்டார் இனிப்பெண்டு பிள்ளைகளைப் பற்றிய
பயமில்லை! கவலையில்லை! மெய்யண்ணே, மெய்மெய்"

(பா.ப.,ப.118–119)

என்று நண்பன் ஒருவன் ஆறுதல் கூறுகிறான். மயங்கிக் கிடந்தவனின் செவியில் இவ்வார்த்தைகள் விழுந்ததும் அவன் எழுந்து "சாவதில் கவலை இல்லை" என்று மொழிகிறான். ஏழ்மைத்துயர் தீர வேண்டுமானால் தனியுடைமை மாய்ந்து பொதுவுடைமை வளர வேண்டும் என்று பாரதிதாசன் விரும்புவது இதனால் புலனாகும்.

**சுரண்டல் ஒழிப்பு**

நாட்டில் வறுமையுடையோரின் பெருக்கத்திற்குப் பொருள் படைத்தோரின் சுரண்டலே காரணம் என்று பாரதிதாசன் எண்ணுகின்றார். பாமர மக்களின் உழைப்பும் முதலாளி வர்க்கத்தால்

சுரண்டப்படுவதைக் கண்டு பாரதிதாசன் கொதிக்கிறார். இந்த நாட்டில் கூலித் தொழிலாளர்கள் பெருகிக் கொண்டிருப்பதற்குக் காரணம் சுரண்டல்தான் என்று முடிவெடுத்த பாரதிதாசன்,

"கைத்திறனும் வாயத்திறனும் கொண்ட பேர்கள்
கண்மூடி மக்களது நிலத்தையெல்லாம்
கொத்திக் கொண் டேப்பமிட்டு வந்த தாலே
கூலிமக்கள் அதிகரித்தார் என்னசெய்வேன்!
பொத்தல்இலைக் கலமானார் ஏழைமக்கள்
புனல்நிறைந்த தொட்டியைப்போல் ஆனார் செல்வர்"

(உலகப்பன் பாட்டு)

என்று பாடுகிறார். பணம் படைத்தவனிடம் செல்வம் சேரும் தன்மையையும் ஏழைமக்களின் வேதனையையும் பொருத்தமான உவமை கொண்டு விளக்குகின்றார்.

"அதிகரித்த தொகை தொகையாய்ச் செல்வமெல்லாம்
அடுக்கடுக்காய்ச் சிலரிடம்போய் ஏறிக்கொண்டு
சதிரொடு தேவடியாள் போல்ஆ டிற்று!
தரித்திரரோ புழுப்போலே துடிக்கின்றார்கள்"

(உலகப்பன் பாட்டு)

வளம் பெற்றோரிடம் சேர்ந்த பணத்திற்கு விலைமாதையும், வறுமையாளனுக்குப் புழுவையும் உவமைகாட்டியிருப்பது பாரதிதாசன் இருதரத்தார் மீதும் கொண்டிருந்த மனநிலையைக் காட்டுகிறது. சுரண்டும் தன்மையை ஒழிக்க வேண்டுமானால் சமயத்தின் பெயரால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள மூடநம்பிக்கையை ஒழித்து, உழைப்பவர்களே திரண்டு நீதி கேட்க வேண்டும் என்பதனை,

"நடவு செய்த தோழர்கள்
நாலணாவை ஏற்பதும்
உடலுழைப்பி லாதசெல்வர்
உலகை ஆண்டுலாவலும்
கடவுளாணை என்றுரைத்த
கயவர்கூட்ட மீதிலே
கடவுள் என்ற கட்டறுத்துத்
தொழிலுளாரை ஏவுவோம்" (பா.க.,ப.112)

என்ற பாடல் மூலம் உணர்த்துகின்றார்.

**பொதுவுடைமையாக்கல்**

உழைக்கும் வர்க்கத்தின் ஏழ்மையைப் போக்கவும், சுரண்டலைத் தவிர்க்கவும் பாரதிதாசன் போதிக்கும் வழிமுறைதான் பொதுவுடைமைத் தத்துவம். இந்த நாட்டில் எல்லோரும் இனிய வாழ்வு வாழ்வதற்கு,

"பொதுவுடைமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்
புனிதமோ டதைஎங்கள் உயிரென்று காப்போம்"

(புதிய உலகு செய்வோம்)

என்று குரல் கொடுக்கின்றார். இந்தப் பொதுவுடைமையே சமுதாயத்தில் புதிய நல்ல மாற்றங்களைக் கொண்டுவரும் என்று எண்ணினார். அதனால் 'உலகப்பனைப் பார்த்து',

"புதுக்கணக்குப் போட்டுவிடு, பொருளை எல்லாம்
பொதுவாக எல்லாருக்கும் நீகுத் தகைசெய்"
"ஏழைமுத லாளியென்ப தில்லா மற்செய்"

(உலகப்பன் பாட்டு)

என்று வேண்டுகோள் விடுக்கிறார். பொருள் உடையவர்கள் தாங்களாகத் தங்கள் உடைமைகளைப் பொதுவுடைமையாக்க விடுக்கும் வேண்டுகோள் இதுவாகும். அவர்களாகத் தராத பட்சத்தில் பாதிக்கப்பட்டவர்கள் சேர்ந்து பறிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும் என்பதை,

"ஓடப்ப ராயிருக்கும் ஏழை யப்பர்
உதையப்ப ராகிவிட்டால் ஓர்நொ டிக்குள்
ஓடப்பர் உயிரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆகிவிடுவார் உணரப் பாநீ

(உலகப்பன் பாட்டு)

என்று கூறுகிறார். கெஞ்சியோ அல்லது ஏறிமிதித்தோ ஏழைமக்களின் நிலையை உயர்த்திவிடத் துடிக்கும் மனித நேயத்தை இங்குக் காணமுடிகின்றது. பாரதிதாசன் படைத்த "அமைதி" என்ற நாடகத்தில் பொதுவுடைமைக் கருத்துப் பெரிதும் பேசப்படுகிறது. இதில் "மண்ணாங்கட்டி" என்ற மாந்தரின் வழியாகச் சமுதாயத்தில் உள்ள பொருளாதார ஏற்றத்தாழ்வை விவரிக்கின்றார்.

இந்த நாட்டில் உள்ள சொத்துக்களும், தொழிற்சாலைகளும், கடைகளும் பொதுவுடைமையாக்க வேண்டும் என்பது பாரதிதாசனின் எண்ணம்.

"செல்வங்கள் யார்க்கும்' என்றே சொல்லிப் பேரிகை
திக்கில் முழக்கிடுவாய்" – பேரிகை
உண்டானதொழிலெல்லாம்
கொண்டான ஆட்சியுமோர் ஆட்சியாகுமா?
பண்டான முதலெல்லாம்
பற்றாத ஆட்சியிலே கலகம் போகுமோ? (மக்கள் நிகர்)

என்னும் பாடல்கள் இதனைக் காட்டும்.

**தொழில் - தொழிலாளர்**

மக்களின் வாழ்க்கைச் செலவுக்கு வேண்டும் வருவாயை ஈட்ட வகைசெய்வது தொழில் ஆகும். இந்தத் தொழில்தான் தொழிலாளரின் வறுமையைப் போக்குகிறது. என்பதை,

"பசித்தவன் புசித்திடப் பரப்பது போன்றதோர் ஓர்
அசைப்பில்லா ஆவலும் அசைப்பில்லா ஊக்கமும்
அடைந்தோர் உனைத்தம் ஆயிரம் ஆயிரம்
தடந்தோள் தழுவியே கடந்தனர் வறுமையே"

என்று உணர்த்துகின்றார். தொழில் இல்லையென்றால் ஒன்றுமே இல்லை; தொழில்தான் ஆணிவேர் என்பதனை,

"தொழிலெல்லாம் நின்றுவிட்டால்
எழிலெல்லாம் பறிகொடுக்கும் இந்தவுலகம்"

(மக்கள் நிகர் பா.க.,ப.513)

என்கிறார். தமிழ்நாடு பொருளாதாரத்தில் உயரவும் இங்குள்ள மக்கள் நிலை உயரவும் பல தொழில்கள் தொடங்க வேண்டும் என்பதை,

"தமிழர் நாட்டினில் பலபல பொருள்கள்
சார்ந்திட்டதில் என்ன பயன்?
சுமைகொள் தேவைகள் ஒரு நொடியில் பெறத்
தோன்ற வேண்டும் நாட்டிலே தொழில்" - (தொழில்)

என்று கூறுகின்றார்.

இந்த உலகத்தையே உருவாக்கியவன் தொழிலாளி என்று பெருமிதம் கொள்கிறார் பாரதிதாசன். இதனை,

"காண்பு தெலாம் தொழி லாளிசெய் தான்"

(பா.க.,ப.126)

"ஆர்த்திடும் யந்திரக் கூட்டங்களே - உங்கள்
ஆதி அந்தம் சொல்லவோ? - நீங்கள்
ஊர்த்தொழிலாளர் உழைத்த உழைப்பில்
உதித்தது மெய் அல்லவா? - (நீங்களே சொல்லுங்கள்)

என்று பாடிப் பெருமிதம் கொள்கின்றார். தொழிலாளியின் சிறப்பிலே இவ்வுலகின் சிறப்பைக் காண்கிறார் பாரதிதாசன். உழைக்கும் தொழிலாளி வர்க்கம் மகிழ்வோடு, மனநிறைவோடு இருந்தால் உலகில் பிரச்சனைகளே இருக்காது என்பதை,

"தொழிலாளர் மகிழ மகிழப்
பழியில்லை பகையில்லை, இல்லை கலகம்"
என்று பாடுகின்றார். (மக்கள் நிகர்)

பாரதிதாசன் தம்முடைய இசையமுது – 1ல் வண்டிக்காரன், மாடுமேய்ப்பவன் பாவோடும் பெண்கள், உழத்தி, ஆலைத் தொழிலாளி, கோடாலிக்காரன், கூடை, முறங்கட்டுவோர், பூக்காரி, குறவர், தபால்காரன், சுண்ணம் இடிக்கும் பெண்கள், ஓவியக்காரன் முதலிய பாடுபொருள்களைக் கொண்டு இசைப்பாடல்களைப் பாடியிருக்கிறார் என்று ச.சு.இளங்கோ குறிப்பிடுவார். இது பாரதிதாசன் தொழிலாளர் மீது கொண்டுள்ள மானுட நேயத்தைக் காட்டுகின்றது. உலக வளம் பெருக்கும் தொழிலாளர்கள் வளங்குன்றி வாழ்வதைக் கண்டு தவிப்புற்ற பாரதிதாசன்,

"காண்ப தெலாம்தொழி லாளிசெய் தான் அவன்
காணத் தகுந்தது வறுமையாம் - அவன்
பூணத் தகுந்ததும் பொறுமையாம்" – (சாய்ந்த தராசு)

என்று மனம் பதறுகிறார். இவர்கள் வாழ்வில் வளம்பெற இரண்டு வழிகளைப் பாரதிதாசன் கூறுகின்றார். முதலாவது வழி பொருளை எல்லாம் பொதுவுடைமையாக்க வேண்டும். இதனை,

"இப்பொழு தேநீர் - பொது
இன்பம் விளைந்திட உங்களின் சொத்தை
ஒப்படைப்பீரே - எங்கள்
உடலில் இரத்தம் கொதிப்பேறு முன்னே"
(தொழிலாளர் விண்ணப்பம்)

என்று தொழிலாளர் விடுக்கும் விண்ணப்பம் காட்டும் இரண்டாவது வழியாகப் பாரதிதாசன் கூடித்தொழில் செய்யும் முறையைப்

பரிந்துரைக்கின்றார். இதனை,

> "வாடித் தொழிலின்றி வறுமையாற் சாவதெல்லாம்
> கூடித் தொழில்செய்யாக் குற்றத்தால் தோழர்களே!
> கூடித் தொழில்செய்யாக் குற்றத்தால் இன்னுவரை
> *மூடிய தொழிற்சாலை முக்கோடி! தோழர்களே!*
> கூடைமுறம் கட்டுநரும் கூடித்தொழில் செய்யின்
> தேடிவரும் லாபம் சிறப்புவரும் தோழர்களே!
>
> (கூடித்தொழில் செய்க)

என்று பாடுகின்றார். எவ்வழிமுறையிலாவது தொழிலாளர் நலனை உயர்த்த எண்ணும் பாரதிதாசனின் பாங்கான உள்ளம் இதில் புலப்படும்.

**வணிகம்**

பொதுநலம் கருதிச் செய்யும் தொழில் வணிகம். அவ்வணிகர் தன்நலவாதியாகிப் பொருளாசைப் பெருகுகின்ற போது கொள்ளை லாபம். கலப்படம் போன்ற முறைகேடுகள் நிகழ்கின்றன. இந்த முறைகேடுகளால் பாதிக்கப்படுவது ஏழை மக்களும் அவர்களின் பொருளாதாரமும் தான். வணிகர்கள் சுரண்டர்களாகச் செயல்படுகின்றனர். இந்தக் கண்ணோட்டத்தில்தான் பாரதிதாசன் வணிகத்தையும் வணிகர்களையும் பார்க்கின்றார்.

> "அரிசி என்றால் கல்லும்புழுவும் அளந்து கொடுப்பார்
> அவிந்த காயைக் கனிந்தவாழை என்று கொடுப்பார்"
>
> (ஏய்க்கின்றாரே)

என்று ஏய்க்கின்றவர்களாக வணிகர்களைக் காட்டுகின்றார். விலையை ஏற்றி விற்பதற்காகப் பொருளை வைத்துக் கொண்டே இல்லை என்பார்களாம். இதனை,

> "பெருங்காயம் ஒருபெட்டி வைத்திருப்போன்
> பிள்ளைப் பெற்றவளுக்கும் இல்லையே என்பான்
> ஒருகிழமை போனால் விலைஏறிற் றென்பான்"
>
> (அரசினரே நடத்த வேண்டும்)

என்று படம் பிடிக்கின்றார். வணிகர்கள் சான்றாண்மை மிக்கவர்களாக விளங்க வேண்டும் என்பது பாரதிதாசனின் கொள்கை.

"வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோற் செயின்" - (குறள்: 120)

என்னும் குறளுக்கேற்ப வணிகர்கள் திகழவேண்டும் என்று எண்ணினார் இதனைக் குடும்பவிளக்கில்,

"அளவாக இலாபம் ஏற்றி
அடக்கத்தை எடுத்துரைப்பாள்
மிளகுக்கு விலையும் கூறி
மேன்மையும் கூறிச் சற்றும்
புளுகாமல், புகன்றவண்ணம்
புடைத்துத் தூற்றிக்கொடுப்பான்"

என்று இனிமையாகக் குறிப்பிடுவார். கொள்ளை லாபம் அடிப்போரும் கலப்படம் செய்வோரும் மானுட நேயம் கொண்டு தாமாக மாறவேண்டும் என்று விரும்பினார். அவ்வாறு அவர்கள் திருந்தவில்லையானால், அரசு சொந்தப் பொறுப்பில் வணிகம் நடத்த வேண்டும் என்று எண்ணினார். அதற்காக,

"இனிய அரசினர் கண்மூடி இருந்தால்
ஏழைமக்களை மண்ணிற் புதைத்தலே
எள்முதல் அரசினர் கொள்முதல் செய்க
எப்பாங்கும் கடைவைத்து விற்பனை செய்க
கண்ப டாது சரக்கைப் பதுக்கும்
கயவர் எதிர்ப்பைக் கான்றுமிழ்ந்திடுக" – (பா.க.,ப.505)

என்று வேண்டுகோளும் வைக்கிறார். ஏழைமக்கள் மீது கொண்ட நேயத்தால் பாரதிதாசன் கொடுத்த குரலால்தான் இன்று நியாயவிலைக் கடைகளும், அமுதம் அங்காடிகளும் நாட்டிற் பெருகியுள்ளன எனலாம்.

**அடிக்குறிப்புகள்**

6. கா.முகம்மது பாருக், தமிழமுது, ப.103
7. திருக்குறள் 384
8. சிலப்பதிகாரம், காட்சிக்காதை, வரி 102–104
9. இரா.இளவரசு, இந்திய விடுதலை இயக்கத்தில் பாரதிதாசன், ப.24
10. ச.சு.இளங்கோ, குடியரசு இதழில் பாரதிதாசன் பாடல்கள் ப.95
11. திருக்குறள் – 751
12. காந்தியடிகள், நிர்மாணத் திட்டம், ப.31

(தொடரும்...)

# மடலூர்தல்

புலவர். க.தண்டபாணி
வீரசோழபுரம், விழுப்புரம் மாவட்டம்.

செந்தமிழ் மொழியில் அகப்பொருள் இலக்கணத்தில் கைக்கிளை முதலாகப் பெருந்திணை இறுதியாக உள்ள எழுதிணைகளுள் பெருந்திணை நான்கு திறம் கொண்டது. அந்நான்கு திறங்களுள் மடலூர்தல் என்பது ஒன்றாகும். இதனைத் தொல்காப்பியம் – பொருள் 54 ஆம் நூற்பா.

"ஏறிய மடற்றிறம் இளமை தீர்திறம்
தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்
மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே."

என்று மடலேறுதலை முதற்றிறமாக மொழிந்துள்ளது.

மடல் என்ற சொல், பனங்கருக்கு, பனங்கருக்கு கொண்டு குதிரை வடிவில் ஆக்கியதோரூர்தி, பனையேடு எனப் பல பொருளில் இலக்கியங்களில் பயின்று வந்துள்ளது. ஊர்தல்–ஊர்ந்து வருதல்.

அருணகிரிநாதரால் அருளிச் செய்யப்பட்ட திருப்புகழில் பழுதற ஓதிக் கடந்து .... என்று தொடங்கும், பொது என்ற தலைப்பிலுள்ள 55 ஆம் செய்யுளில் மடலூர்தல் மொழியப்பட்டுள்ளது.

"மதராசன் ..........
பரிமஎத் தயர்ந்து பனைமடலூர்தற் கிசைந்து...."

என்ற அடியிலுள்ள மடலூர்தலுக்குத் திருப்புகழ் விருத்தியுரை கீழ்க்கண்டவாறு உள்ளது.

ஒரு பெண்ணின் மேல் காமம் கொண்ட ஒருவன் அப்பெண்ணை அடைதற்கு அவளைப்போல் ஒருருவத்தைப் பனைமடலில் எழுதிப் பின் பனை மட்டைகளால் செய்யப்பட்ட குதிரையின் மேல் ஊர்ந்து வர அப்போது அவன் உடம்பினின்றும் காமநீர் வெளிப்படுமாயின் அவனால் காதலிக்கப்பட்ட பெண்ணை மணஞ்செய்வித்தலும் அவ்வாறன்றி அவன் உடம்பில் உதிரம் வெளிப்படுமாயின் அவனைக் கொல்லுதலும் வழக்கு.

காதல் மறுக்கப்பட்ட ஒருவன் 'மணம் இல்லையேல் மரணம்' என்று உறுதி பூண்டதையே மடலூர்தல் என்று திருப்புகழ் விருத்தியுரை பகர்கிறது. பெண்ணின் உருவத்தை 'கிழி' (கிழிபட்ட துகில்) யில் எழுதியதாகவும் பல ஏடுகள் இயம்புகின்றன. இவ்வாறு ஆண் மகன் மடலேறுதல் பண்டைய சமுதாயத்தில் உலகியல் வழக்காக இயங்கிற்று.

தொல்காப்பியர் ஏறிய என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். அருணகிரிநாதர் ஊர்தல் என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். குதிரை வடிவில் ஆக்கியதோர் ஊர்தியில் ஊர்ந்து செல்பவனைக் குறிப்பதால் 'ஊர்தல்' என்ற சொல் பொருந்துகிறது. குதிரை (வடிவில்) யின் மேல் ஏறிச் செல்பவனைக் குறிப்பதால் 'ஏறிய' என்ற சொல்லும் பொருந்துகிறது.

"மடல்மா ஊர்ந்து மாலைசூடி........"

என்று விளம்பும் நற்றிணை 377 ஆம் செய்யுளில் மா (குதிரை) ஊர்ந்து என்ற தொடரை ஈண்டு நினைவூட்டுவது சாலும்.

"மாமேலேன் என்று மடல்புணையா நீந்துவேன்"

என்று இயம்பும் கலித்தொகை 139ல் 15ஆம் அடியில் மாமேல் என்ற தொடர் உள்ளதை நோக்குக. எனவே மடலூர்தலை மடலேறலெனினும் ஒக்கும்.

மடலேறுதல் பெண்டிர்க்குப் பொருந்துவதன்று என்பதை,

"எத்திணை மருங்கினும் மகடூஉ மடன்மேல்
பொற்புடை நெறிமை யின்மையான"

என்று தொல்காப்பியம் – பொருள் – அகத்திணையியல் நூற்பா–8 விளம்புகிறது. திருவள்ளுவரும் இக்கருத்தையே,

"கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணின் பெருந்தக்க தில்" - (குறள்-1137)

என்ற குறட்பாவில் சுட்டியுள்ளார். மகடூஉ மடலேறுதல் இல்லை. எனவே ஆடூஉ மடலேறுதல் உண்டு என்பது பெற்றாம்.

திருமங்கையாழ்வார் இயற்றிய சிறிய திருமடல் என்ற சிற்றிலக்கியத்தில் 153, 154 ஆம் அடிகளில்,

"பேரா யிரமும் பிதற்றிப் பெருந்தகவே
ஊரே இகழிலும் ஊரா தொழியேன்நான்"

என்று திருமங்கையாழ்வார் பெண் (தலைவி) மடலூரப்போவதாகக் கூறியுள்ளார். இப்படிக்கூறுவது இலக்கணத்திற்கு மாறாக அமைகிறது என்று சிலர் கூறுவர். திருமங்கையாழ்வார் சிறிய திருமடலில் 155 அடிகளிலும் ஒரே எதுகையைப் பயன்படுத்தியவர். அவர் இலக்கணத்திற்கு மாறாக இலக்கியம் படைப்பாரா? ஆராய்ந்து காண்போம்.

புலவர்கள் இறைவனைத் தலைவனாகவும் தம்மைத் தலைவியாகவும் கொண்டு பக்தி இலக்கியம் படைப்பது மரபு. இம்மரபுக்கு இணங்க திருமங்கையாழ்வாரும் இறைவனைத் தலைவனாகவும், தன்னையே தலைவியாகவும் கொண்டு சிறிய திருமடலை இயற்றியுள்ளார். இவ்விலக்கியத்தில் தலைவி யார்? திருமங்கையாழ்வாரே. எனவே ஊரா தொழியேன் என்ற தொடரை திருமங்கையாழ்வாரின் (ஆடூஉ) கூற்றாகவே கொளல் வேண்டும். தலைவி (மகடூஉ) யின் கூற்றாகக் கொளல் கூடாது. தலைவியே கூறியிருப்பதாகக் கொண்டாலும் ஊரா தொழியேன் என்று கூறியிருப்பதால் மடல் ஊரவில்லை என்பதே பொருளாகிறது.

தொல்காப்பிய இலக்கணத்திற்கு உட்பட்டே திருமங்கையாழ்வார் இலக்கியத்தைப் படைத்துள்ளார் என்பதை யாரும் மறுக்க இயலாது. எனவே மடலூறுதல் ஆண்பாலருக்குரியதே என்பதையும் நாணுடைய பெண்பாலருக்குரியதன்று என்பதையும் அறிந்து கொள்ளலாம்.

தமிழ்ப் புலவர்களின் திறமையை நோக்குழி அவர்களின் கூர்ந்த மதி புலனாகிறது. நாம் தமிழர் என்று எண்ணும்போது சொலற்கரிய இன்பம் கிளர்ந்தெழுகிறது.

# கடவுள் நம்பிக்கை

முனைவர் மெ.மெய்யப்பன்

**ஆன்மிகமும் அறிவியலே**

மக்களின் நட்புறவான, ஒருங்கிணைந்த, இனிமையான சமுதாய வாழ்க்கைக்கு ஆன்மிகம் மிகவும் இன்றியமையாதது என்பதைப் புரிந்து கொண்ட தமிழ்ச் சான்றோர்கள் தமிழோடு ஆன்மிகத்தையும் ஒன்றாகக் கலந்து வளர்த்து வந்தார்கள். ஆன்மிகத்தில் நம்பிக்கை கொண்ட மக்களின் வாழ்க்கை சிறப்பாக அமைந்தது. சாகாத சமுதாயத்திற்கு உறுதுணையாக வழிகாட்டலாய் இருந்ததால், பின்வரும் சந்ததியினரும் அச்சமில்லாத அமைதியான வாழ்க்கையைப் பெற்றனர். ஆனால் இன்றைக்கு அந்த அமைதி எங்கே தொலைந்து போனது? உள்ளுக்குள்ளே எண்ணங்களின் ஓயாத கொந்தளிப்பு; நட்பும், உறவும் இருந்தும் ஒருவரை ஒருவர் பகையாகப் பார்க்கும் பார்வை; மனம் உண்மையிலேயே எதைத் தேடுகின்றது, எதை நாடுகின்றது என்று தெரியாததால் மேலிடும் குழப்பம்; பொருள் எவ்வளவு சேர்த்தாலும் போதாது என்ற ஏக்கம்; இன்னும் வேண்டும் என்றாலும் எவ்வளவு என்பதும் தெரியாது. நம்மில் பலருக்கு எதிரில் இருக்கும் உண்மையான உருவங்களை விட கறுமையான நிழல்களே அழகாகத் தெரிகின்றன. கிடைத்ததைவிடக் கிடைக்காததற்கும், தேவையானதைவிட தேவையில்லாததற்கும் தகுதியில்லாமலேயே ஆர்வம் கொள்வதால் பெற்றதிற்கு மகிழ்ச்சியை இழந்து, பெறாததற்கு ஏக்கம் கொள்கின்றார்கள். மகிழ்ச்சியை இழந்து ஏக்கத்தினால் மிஞ்சும் வருத்தம் தொடரும்படி வாழ்க்கையை வீணடித்து விடுகின்றார்கள்.

அறிவியல் அறிமுகமான பின், ஆன்மிகம் அறிவியலுக்குப் புறம்பானது என்ற கருத்து தூண்டப்பட்டது. ஆன்மிகத்தின் மெய்ப் பொருளைத் துறந்து மறந்து விட்ட நிலையில் இது வெறும் கருத்து மயக்கமே. அறிவியலுக்கு முன்பு மனிதர்களுக்கு அறிமுகமானது ஆன்மிகம். இதை அறிவியலின் ஆரம்ப கால அரிச்சுவடி எனலாம். ஆன்மிகத்தின் அறிவியல் வாசனையே அதை அழிந்து போய்விடாமல் பாதுகாத்து வருகின்றது. அழியாமல் வாழ முயன்று கொண்டிருக்கின்ற கோயில்களே இதற்குச் சான்று.

பண்டைக் காலத்தில் இருந்த கட்டடங்கள் எல்லாம் சிதைந்து மண்ணோடு மண்ணாகிப் போயின. மன்னர்கள் தங்களுக்குப் பெரும் பொருள் செலவழித்துக் கட்டிக் கொண்ட அரண்மனைகளும்,

மாடமாளிகைகளும், கூட கோபுரங்களும், கோட்டை கொத்தளங்களும் சிதைந்து அழிந்து போயின. ஆனால் ஆன்மிகம் தழைக்க அவர்களால் கட்டப்பட்ட கோயில்கள் மட்டும் இன்றைக்கும் தலை நிமிர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றன. இதற்குக் காரணம் ஆன்மிகம் அறிவியலைப் போல வாழ்க்கையின் மேன்மைக்கு வேண்டிய மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மனநிலையே ஆகும்.

உலகில் எந்த நாட்டை எடுத்துக் கொண்டாலும், அங்கு வாழும் மக்கள், மதம், இனம், மொழி, நாகரிகம், தொழில் மற்றும் நிறம் இவற்றால் வேறுபட்டவர்களாக இருந்தாலும், அவர்கள் எல்லோரும் ஆன்மிகத்தை வாழ்க்கைக்கு வேண்டாத ஒன்றென்று ஒதுக்கி விடவில்லை. மாறாக ஒரு மனதாக ஏற்றுக் கொண்டுள்ளார்கள். அறிவியல் மிகவும் வளர்ந்துள்ள மேலை நாடுகளின் நிலையும் இதுதான். வாழ்க்கையில் மனநிறைவான முன்னேற்றத்திற்கு அறிவியல் மட்டும் போதாது. ஆன்மிகமும் வேண்டும் என்பதை இது சுட்டிக்காட்டக்கூடியதாக இருக்கின்றது.

அறிவியல் உடலுக்கு என்றால் ஆன்மிகம் உயிருக்கு. அறிவியலால் உடல் நலம் பெறலாம், உள்ளம் மகிழ்வுறலாம். ஆனால் உயிரின் தகுதிப்பாட்டை மேம்படுத்துவது ஆன்மிகமே. உயிர், உடல் இவற்றில் ஒன்றிருந்து ஒன்றில்லாவிட்டால் எப்படி உயிர்வாழ்க்கைக்கு மதிப்பில்லையோ, அப்படியே அறிவியல், ஆன்மிகம் இவற்றில் ஒன்றை மறந்து ஒன்றை மட்டும் வளப்படுத்திக் கொண்டால் சமுதாயம் சிறப்படைவதில்லை.

சொல்லப்போனால் ஆன்மிகமும் ஒரு விதத்தில் அறிவியலே. இயல்பாக வாழும் கலையை, வாழ்க்கையின் போக்கிலேயே எளிமையாக, யாவர்க்கும் கற்றுக் கொடுக்கும் கல்வி. இயற்கையைப் பார்த்துப் பார்த்துப் பாடம் கற்றுக் கொண்டு வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்ளும் அணுகுமுறை. சாகாத சமுதாயத்திற்கு இயற்கை உரம். அறிவியலுக்கு அடிப்படையாக அமைந்திருக்கும் அதே இயற்கையே, ஆன்மிகத்திற்கும் அடிப்படையாக அமைவதால் ஆன்மிகமும் அறிவியலே என்று சொல்வதில் தவறேதும் இல்லை.

ஆன்மிகம் என்பது வெறும் கடவுள், கடவுள் நம்பிக்கை, பக்தி, தியானம், படையல், யாகம், வழிபாடு என்பதில்லை. இவையாவும் ஆன்மிகத்தைப் புரிந்து கொள்ள உதவும் வழிமுறைகளே ஆகும். உண்மையில் ஆன்மிகம் ஆத்மாவின் தரத்தை, தகுதிப்பாட்டை உயர்த்திக் கொள்ளத் தூண்டும் ஒரு வழிமுறை. இயற்கையோடு

ஒன்றிணைந்து ஒத்ததிரத் தூண்டும் மனப்போக்கு, இயல்பாக வாழும் வழிமுறையைத் தன்வசப்படுத்திக் கொள்ள தனக்குத் தானே வழிகாட்டிக் கொள்ளும் ஒப்பற்ற எளிய அணுகுமுறை. ஒவ்வொருவரும் தங்களுடைய எண்ணங்களைத் தாங்களே தூய்மைப்படுத்திக் கொள்ள உதவும் உன்னதமான நடைமுறை. ஒருவருக்கு மட்டுமின்றி எல்லோருக்கும் இன்பமும் மகிழ்ச்சியும் தரும் இனிய சமுதாய வாழ்க்கையின் மூல மந்திரம்.

சாகாத சமுதாயத்திற்கு இந்த ஆன்மிகம் உயிர்நாடி. ஆன்மிகத்தை மதிக்காத சமுதாயம் குறுகிய காலத்தில் மடிந்து போய்விடும். சமுதாயம் முன்னேறிச் செல்லும்போது கூடவே இந்த ஆன்மிகமும் போற்றப்பட்டால்தான், சமுதாயம் நிலைத்து வாழும் வாய்ப்பினைப் பெறும். இதனால் ஆன்மிகத்தை, நாகரிக வளர்ச்சியின் எக்கால கட்டத்திலும் புறக்கணிக்க முடியாது.

ஆன்மிகத்தைத் தெரிந்து கொள்வதை விட, அறிந்து கொள்வதைவிடப் புரிந்து கொள்வது மிகவும் முக்கியம். அதுமட்டுமே நிலைத்த பயன் நல்கக்கூடியது. ஆன்மிகச் சிந்தனைகளுக்கு முன்னதாக மனதில் குடியேறிவிட்ட தீய எண்ணங்களின் ஆதிக்கத்தை அகற்ற இந்தப் புரிதல் அவசியம்.

**கடவுள் நம்பிக்கை என்றால் என்ன?**

கடவுள் நம்பிக்கை என்பது கோயிலுக்குச் செல்வதோ, கடவுளைத் தெரிந்து கொள்வதோ, பெயரை உச்சரிப்பதோ, கை வலிக்க எழுதுவதோ இல்லை. இயற்கையால் படைக்கப்பட்ட மனிதன் தன்னைத் தானே நம்புமாறு அதே இயற்கையைப் பார்த்து வாழ்க்கையில் நம்பிக்கையை வளர்த்துக் கொள்வது கடவுள் நம்பிக்கை எனலாம். புரிதல் இல்லாத வெறும் கடவுள் நம்பிக்கை ஒருபோதும் பயனளிப்பதில்லை. அரை குறையாகத் தெரிந்ததையும், அறிந்ததையும் வைத்துக் கொண்டு பொருளற்ற கடவுள் நம்பிக்கையை மட்டுமே மனதில் வளர்த்துக் கொண்டவர்கள் வாழ்க்கையில் ஏமாற்றமடைகின்றார்கள். பொருளற்ற கடவுள் நம்பிக்கைக்கு கடவுள் என்றொரு படைப்பு ஆதாரமாயிருக்கின்றது. இவர்களுக்குக் கடவுள் நம்பிக்கை என்பது கடவுள் என்றொருவர் இருக்கின்றார் என்பது மட்டுமே. வெகு பலர் இப்படித் தவறாகக் கற்பித்துக் கொண்டு, அந்தத் தவறான கடவுள் நம்பிக்கையைக் கூட இறுதியில் இழந்து விடுகின்றார்கள்.

எல்லோருடைய மனதிலும் கடவுள் நம்பிக்கை உறுதியில்லாதிருப்பதற்குக் காரணம் அது பற்றிய அடிப்படை உண்மைகளை யாரும் முழுமையாகப் புரிந்து கொள்ளாதிருப்பதேயாகும். சாதாரண மக்கள் மட்டுமின்றி, ஆன்மிகவாதிகளும் கூட இக்குறைபாட்டிற்கு உட்பட்டிருக்கின்றார்கள். கடவுள் நம்பிக்கையை ஊட்டி வளர்க்கும் முயற்சியில் மகிழ்ச்சிகரமான வாழ்க்கைக்குக் கடவுள் நம்பிக்கை மட்டும் போதும் என்று கடவுளை முதன்மைப்படுத்தி வாழும் போக்கை நியாயப்படுத்துவது பெரும்பாலான ஆன்மிகவாதிகளின் இயல்பாக இருக்கின்றது. கோயிலுக்குப் போய் தொழுவதாலும், காணிக்கையை உண்டியலில் செலுத்துவதாலும் மட்டும், மாணவர்கள் வகுப்பில் பாடம் கற்றுக் கொள்ளாமல் தேர்வில் வெற்றி பெறுவதில்லை. இயந்திரப் பொறியாளர்கள் தொழிற்பயிற்சி சரியாக எடுத்துக் கொள்ளாமல் பழுதகற்ற முடிவதில்லை. விளையாட்டு வீரர்கள் தினமும் உடற்பயிற்சி மேற்கொள்ளாமல் போட்டிகளில் சாதனை படைக்க முடிவதில்லை. நமக்கு வேண்டியதைப் பெற நம்மீதே நமக்கு நம்பிக்கையில்லாமல் கடவுள் மீது வெறும் நம்பிக்கையை வளர்த்துக் கொள்வது முரண்பாடான செயலாகும்.

அன்றாட வாழ்வில் நிகழும் சில நிகழ்வுகளினால் இக்கருத்தை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்.

கடலை ஒட்டிய ஒரு கிராமத்தில் ஒரு மீனவன் வசித்து வந்தான். அவன் தினமும் நடுநிசியில் கடலுக்குள் சென்று அதிகாலையில் மீன்களோடு கரைக்கு வருவான். சில சமயம் கடல் கொந்தளிக்கும். கரையோரமாய் வசிக்கும் மக்கள் பயப்படுவார்கள். ஆனால் அந்த மீனவன் எதைப் பற்றியும் அச்சப்படாமல் தினமும் கடலுக்குள் சென்று மீன்பிடித்து வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தான்.

ஒருநாள் அவனுக்குத் திருமணமானது. திருமணத்திற்கு மறுநாள் அவன் வழக்கம் போல் கடலுக்குள் செல்லப் புறப்பட்டான். கொந்தளிக்கும் கடலுக்குள் திருமணமான மறுநாளே அவன் செல்வதை அவன் மனைவி விரும்பவில்லை. அச்சத்துடன் அவள் அவனிடம் கேட்டாள், "கடலுக்குள் செல்வது உங்களுக்குப் பயமாக இல்லையா?". அதற்கு மீனவன், "எனக்கு கடவுள் என்றும் துணையிருப்பார் என்ற நம்பிக்கையிருக்கின்றது. அது உறுதியாக இருக்கும்போது அச்சம் என்னைத் தீண்டுவதில்லை" என்று சொன்னான்.

அவனது பதில் அவளுக்குத் திருப்தியளிக்கவில்லை. "எல்லாம் கடவுள் பார்த்துக் கொள்வார் என்பது குருட்டுத்தனமான நம்பிக்கையில்லையா? அது எப்படி உங்களுக்கு முழுமையான பாதுகாப்பளிக்க முடியும்?" தன் கணவன் மீது கொண்ட அன்பால் அவள் மீண்டும் கேட்டாள்.

அதற்கு அந்த மீனவன் பதிலேதும் சொல்லாமல், செய்கையாலே பதில் கொடுத்தான். தன் இடுப்பில் சொருகி வைத்திருந்த ஒரு கத்தியை எடுத்து அவளை வெட்டுவதுபோல பாவனை செய்தான். இதைப் பார்த்த அவன் மனைவி அச்சப்படாமல் வாய்விட்டுச் சிரித்தாள். அப்போது மீனவன் தன் மனைவியைப் பார்த்து, "நான் உன்னை வெட்டுவது போல வந்தும் நீ எப்படிப் பயமின்றி இருக்கின்றாய்?" என்று கேட்டான். அதற்கு அவள், "கத்தி ஒரு கொலைக்கருவியாக இருக்கலாம். ஆனால் அதை வைத்திருப்பது என் மீது அளவு கடந்த அன்பு வைத்திருக்கும் என் கணவர் அல்லவா? நீங்கள் என்னை ஒன்றும் செய்து விடமாட்டீர்கள் என்று தெரியும். அதனால் நான் பயப்படவில்லை" என்று சொன்னாள்.

"அதைப் போலத்தான் எனக்கும். இந்தக் கடல் வேண்டுமானால் ஆபத்தானதாக இருக்கலாம். ஆனால் இதைப் பார்த்துக் கொண்டிருப்பவர் வாழ்வதற்காக எல்லோரையும் படைத்த இறைவனாகும். அவர் என்னையும் பாதுகாப்பவர் என்ற நம்பிக்கை எனக்கிருக்கின்றது. என்மீது கொண்ட நம்பிக்கையால் நீ எப்படி பயப்படவில்லையோ, அதைப்போல கடவுள் மீது நான் கொண்ட நம்பிக்கையால் பயப்படவில்லை" என்றான் அந்த மீனவன்.

இந்த நிகழ்வில் உணர்வும், உள்ளுணர்வும் ஒன்றெனக் கொள்ளப்படுவதாலும், பகுத்தறிவோடு சிறிதும் தொடர்பின்றி இருப்பதாலும் கருத்து மயக்கம் ஏற்படுவது தவிர்க்க இயலாததாக இருக்கின்றது. மீனவன் கடவுள் நம்பிக்கையால் பத்திரமாய்க் கரை திரும்பினான் என்றோ, அல்லது கடல் கொந்தளிப்பில் சிக்கி மாண்டு போனான் என்றோ கதை எப்படிவேண்டுமானாலும் முடியக்கூடும். ஆனால் வாழ்க்கை அப்படியில்லை.

கார்கில் போர் முடிந்து வீடு திரும்பிய இராணுவ வீரனின் கையில் இயந்திரத் துப்பாக்கி பெருமிதத்துடன் காட்சியளித்தது. ஆனந்தக் கண்ணீர் மல்க அவன் இளம் மனைவி ஓடிவந்து அவனையும் அவன் துப்பாக்கியையும் ஆரத் தழுவிக் கொண்டாள். எதிரியை ஓட ஓட விரட்டிய கொலை கருவியான துப்பாக்கி

அவளுக்கு அச்சம் தரவில்லை. விறகு வெட்டியின் கையிலிருந்த அறுவாளைக் கண்டு அவனது ஒரு வயதுப் பையன் அச்சப்படவில்லை. இது உறவின் வலிமையைப் புரிந்து கொண்டவர்கள், மரபு வழியாகப் பெற்று நிலைப்படுத்திக் கொண்ட நம்பிக்கை.

கடவுள் காப்பாற்றுவார் என்று யாரும் தகுதிக்கு மீறிய செயல்களில் ஈடுபடுவதில்லை. நீச்சல் தெரியாத ஒருவன் கடவுள் மீது கொண்டிருக்கும் நம்பிக்கையால் கடலுக்குள் குதிப்பதில்லை. விமானத்தை இயக்கத் தெரியாத ஒருவன் கடவுள் நம்பிக்கையால் மட்டும் அதை இயக்க முயற்சிப்பதில்லை. பாதுகாப்பான நடவடிக்கைகளின்றி உயரமான மலைகளில் ஏறுவதும், ஆழ்கடலில் மூழ்குவதும், காற்றேயில்லாத விண்வெளியில் பயணிப்பதும் இல்லை. கடவுள் காப்பாற்றுவார் என்று எவரும் இயற்கைக்குப் புறம்பான செயல்களைச் செய்வதில்லை. பகுத்தறிவிற்கு உட்பட்டு அப்படிப்பட்ட செயல்களில் சிலவற்றை இயற்கையின் வரம்பிற்குள் கொண்டுவர முடியும். எனவே பகுத்தறிவு என்பது தனிமனிதன் ஈடுபடும் செயல்களுக்கெல்லாம், கடவுள் நம்பிக்கையைவிட முக்கியமானதாக இருக்கின்றது. ஒவ்வொரு பறவையும் தனக்கு இன்றைக்கு உணவு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தான் தினமும் பயணத்தைத் தொடங்குகின்றது. திக்குத் தெரியாத காட்டிற்குள் எப்பக்கம் சென்றால் எதிரிகளின் தாக்குதலிலிருந்து தப்பிக்கலாம், எப்போது சென்றால் குடிப்பதற்கு நீர் கிடைக்கும் என்று தனக்கிருக்கும் பகுத்தறிவைப் பயன்படுத்திக் கொள்ளாத விலங்கினங்கள் உண்டா?

நாம் வளர்த்துக் கொண்டுள்ள கடவுள் நம்பிக்கை உணர்வு, உள்ளுணர்களோடு மட்டும் தொடர்புடையதாக இருக்கின்றது. பகுத்தறிவால் பண்படவில்லை. திரைப்படம் பார்க்கும்போது பாத்திரங்களின் மீது இரக்கப்பட்டு கண்ணீர் சிந்தினால், அல்லது நகைச்சுவையை இரசித்துச் சிரித்தால் அது உணர்வு. தற்காலிகமானது. ஒரு பாம்பு சீறிக் கொத்த வந்தால் சட்டெனக் காலை விலக்கிக் கொள்வது உள்ளுணர்வு. வாழ்க்கைப் போராட்டத்தில் விளைந்த உள்ளார்ந்த உணர்வு. மழைக்காலத்தில் வண்டிகள் வீதியில் வேகமாகச் செல்லும் போது எங்கே சேறை வாரி வீசுமோ என்று இடம் பார்த்து ஒதுங்குவதும், கையில் பிடித்திருக்கும் குடையால் தடுத்துக் கொள்வதும் பகுத்தறிவோடு தொடர்புடையன. கடவுள் நம்பிக்கை என்பது நம் மீது நம்பிக்கை கொள்ள நம்புமாறு

கடவுளை நம்புவதாகும். இதில் கடவுள் நம்பிக்கை உள்ளுணர்வு, தன்னம்பிக்கை பகுத்தறிவு, உள்ளுணர்வும் பகுத்தறிவும் கலந்ததே கடவுள் நம்பிக்கை.

ஓர் உண்மைச் சம்பவத்தைப் பற்றிக் கூறினால் இதை நன்கு புரிந்து கொள்ளமுடியும். "உள்ளுணர்வை விடப் பகுத்தறிவு தரும் நம்பிக்கை வலுவானது" என்று சார்லஸ் டார்வின் என்ற விஞ்ஞானி கூறுவார். இவர் பரிணாமக் கொள்கையைக் கண்டுபிடித்து உயிரினங்களின் வளர்ச்சிப்படிகளில் ஒன்றுக்கொன்று தொடர்பு இருப்பதை முதன் முதலாக உலகிற்குத் தெரிவித்தார். குரங்கிலிருந்து பிறந்த மனிதன் ஆறாவது அறிவான பகுத்தறிவை முழுமையாகப் பெற்றிருப்பதால், அதன் தாக்கம் உள்ளுணர்வைக் காட்டிலும் மேலானதாக இருக்க வேண்டும் என்று டார்வின் உறுதியாக நம்பினார்.

ஒரு சமயம் தன் நண்பரொருவருடன் மிருகக் காட்சிச் சாலையைச் சுற்றி வரும்போது இது போன்ற விவாதம் நடைபெற்றது. நண்பர் ஒவ்வொரு முறையும் மறுத்துப் பேசப்பேச கலந்துரையாடல் தீவிரமானது. "ஏன் இதை இங்கேயே, இப்போதே சோதித்துப் பார்க்கக்கூடாது?" என்று நண்பர் கேட்க டார்வினும் ஒப்புக்கொண்டார். இருவரும் கண்ணாடி அறைக்குள் அடைக்கப்பட்டுள்ள பாம்புப் பண்ணைக்குச் சென்றனர். டார்வின் ஒரு நச்சுப் பாம்பிற்கு அருகில் கண்ணாடிச் சுவரில் தன் முகம் பதியுமாறு அழுத்தி வைத்தார். அந்தப் பாம்பு சீறி நஞ்சைத் துப்பியது. அப்போது டார்வின் தன் கன்னத்தைச் சட்டென விலக்கிக் கொண்டார். இது உயிரைத் தற்காத்துக் கொள்ள உள்ளுணர்வு தூண்டும் தன்னிச்சைச் செயல். டார்வினின் இச்செயலைச் சுட்டிக்காட்டி அவரது நண்பர் "நீங்கள் பாதுகாப்பாகக் கண்ணாடிக் கூண்டுக்கு வெளியே இருக்கின்றீர்கள். கண்ணாடிச் சுவரைத் தாண்டி பாம்பு உங்களைத் தீண்ட முடியாது என்று தெரிந்திருந்தும் உங்கள் பகுத்தறிவு ஏன் செயல்படாமல் போனது? உள்ளுணர்வின் ஆளுகைக்கு உட்பட்டதால் தானே உங்களை அறியாமலேயே உங்கள் கன்னத்தை விலக்கிக் கொண்டீர்கள்" என்று எடுத்துரைத்தார். ஒருவருடைய வாழ்க்கை உள்ளுணர்வு, பகுத்தறிவு இவற்றால் பின்னப்பட்டது. உள்ளுணர்வில்லாத பகுத்தறிவும், பகுத்தறிவில்லாத உள்ளுணர்வும் சமுதாய வாழ்க்கையை மேம்படுத்துவதில்லை என்பதை இச்சம்பவம் எடுத்துரைக்கின்றது.

*15.8.2007 அன்று விடுதலைத் திருநாளின்போது புதுடில்லியில் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்கள் ஆற்றிய உரையின் ஒரு பகுதி*

# நீண்ட பயணம்

நம் நாடு இளமையானது. இளைஞர்களைக் கொண்ட நாடு என்பது மிக முக்கியமானது. இளைஞர்களின் ஆற்றலானது ஒருமுறை முறையாக ஏவிவிடப்பட்டால் இந்திய நாட்டை ஒரு புதிய வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்லும் என்பது உறுதியாகும். உங்கள் ஒவ்வொருவருக்கும், நம் நாட்டுக்கும் இன்னும் சிறப்புகள், நலன்கள் கிடைக்க இருக்கின்றன என்பதை உங்களுக்கு உறுதியாகக் கூறுகிறேன்.

எனினும், நாம் மிகையான நம்பிக்கையுடன் இருந்துவிடக் கூடாது. நீண்ட நெடிய பயணத்தை நாம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. நம்முடைய கனவுகள் செயலாக்கம் பெறுவதற்குப் பத்தாண்டுகால கடின உழைப்பும், உறுதியான நீடித்த பொருளாதார வளர்ச்சியும் தேவைப்படுகின்றன. நம் நாட்டு மக்கள் இளைஞர்கள், உழவர்கள், வணிகர்கள் ஆகியோரிடையே நிலவிடும் காலத்திற்கேற்ப இயங்கிடும் மனப்பான்மையை நாம் நன்றாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

நம்முடைய ஆற்றலிலும், வலிமையிலும் நாம் நம்பிக்கை வைக்கவேண்டும். நம் ஒவ்வொருவருக்கும் தனித்தன்மைகள் உள்ளன. முதலும் முடிவுமாக, ஒவ்வொரு குடிமகனும் தாம் ஒரு இந்தியன் என்பதை உணரவேண்டும். சிறிய, அற்ப பிரச்சனைகளுக்கெல்லாம், பொருளற்றசொந்த கருத்து வேறுபாடுகளுக்கெல்லாம் நம்முடைய ஆற்றல்களைச் சிதறச் செய்கிறோம்; வீணாக்குகிறோம். குறுகிய, பிரிவினை நோக்கங்களுடன் மக்களைப் பிளவுபடுத்திட வேண்டாமென நம் நாட்டின் அரசியல் கட்சிகளையும், அரசியல் கட்சித் தலைவர்களையும் சமூகத் தலைவர்களையும் நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். வேற்றுமையிலும் ஒற்றுமை காண்பதில்தான் நம்முடைய வலிமை அடங்கியுள்ளது. அந்த ஒற்றுமைதான் நமக்கு விடுதலைபெற்றுத் தந்தது. அந்த ஒற்றுமைதான் ஒரு நாடு என்கிற வலிமையை நமக்குத் தருகிறது.

இதுவே நம்முடைய முன்னோர்களின் கனவாகும். இதுவே நம்முடைய அரசமைப்புச் சட்டத்தின் தொலைநோக்கு இலட்சியமும் ஆகும். இந்த இலட்சியத்திலிருந்து நாம் விலகிச் செல்லக்கூடாது. வருங்காலத்தைத் துணிச்சலுடன் சந்திக்க வேண்டும். 60 ஆண்டுகளுக்கு முன்பு இந்தக் கோட்டை கொத்தளங்களின் மீது ஏறி நின்று பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் "சட்டங்களும் அரசமைப்புச் சட்டங்களும் மாத்திரமே ஒரு நாட்டை புகழ்மிக்கதாக ஆக்கிவிடுவதில்லை. அந்த நாட்டு மக்களின் ஆர்வம், ஆற்றல், இடைவிடா முயற்சி ஆகியவையே ஒரு நாட்டைப் புகழ்மிக்கதாக ஆக்குகின்றன" – என முழக்கமிட்டார்.

நம் நாட்டு மக்களின் பொது நலனுக்காகவும் நாட்டின் முன்னேற்றத்திற்காகவும் நாம் அனைவரும் கூடி உறுதியாக உழைப்போம் வாரீர்!

## வாசகர் வாசகம்

ஐயா வணக்கம்,

பொருள் பொதிந்த கட்டுரைகளைச் சுமந்து செந்தமிழ் இதழ் வெளிவருவது மகிழ்ச்சி அளிக்கின்றது. தொடர்ந்து இது போன்ற கட்டுரைகள் வெளிவர வாழ்த்துகிறேன். உங்களின் தமிழ்ப் பணியும் சிறக்கட்டும்.

தமிழுணர்வுடன் நன்றிகள் பல.

இப்படிக்கு,
முனைவர். **P. இந்திராகாந்தி**
தஞ்சாவூர்.

✡✡✡✡

அன்பிற் பெருந்தகை,

இனிய இலக்கிய வணக்கங்கள்.
பொற்றாமரைக் குளம்பிறந்த
சங்கப்பலகை ஏற்ற
குறளுக்குச் சிறப்பளித்தீர்
அன்று
தமிழினைக் காக்கும்
பணியினைத் தொடரும்
நான்காம் சங்கம்
அடியேன் சிறுநூலுக்கு
'உணர்வின் உந்தல்'
நூல்மதிப்புரை தந்து
உயர்த்திட்டீர் இன்று
நன்றி கோடி.

தங்கள் சங்கப் பணிதொடரவும் இதழ்ப்பணி வளரவும் நெஞ்சு பொங்கும் வாழ்த்துக்கள்!

தங்கள் உண்மையுள்ள,
**இரா.மோகன்குமார்**
சேலம் மாவட்டம்.

பாவலர் "சுரதா" வின் தேன்மழை தொகுப்பில் இடம் பெற்றது.

# பாண்டித்துரைத் தேவர்

## (1867 - 1911)

"ஆயிரத்தெண் ணூற்றறுபத் தேழாம் ஆண்டில்
அவதரித்த தேவர் யார் ?," "தெரியா தையா !
"தூயதுதி மஞ்சரிநூல், சைவஞ் சார்ந்த
துதிநூற்கள், தொகைத்திரட்டுப் போன்றநூற்கள்,
நாயகியின் தேன்முத்த வண்ணப் பாடல்
நாட்டுக்குத் தந்தார்யார் ?," "தெரியா தையா !
"தீயசெயல் செய்யாத பொன்னு சாமித்
தேவரவர் புதல்வர்யார் ?," "தெரியா தையா !
"அப்பாவி ! செந்தமிழுக்குத் தொண்டு செய்த
அறிஞரைநீ அறிந்துகொள்ளா திருக்கின் றாயே !
துப்பாய வானமழை வள்ளல் பாண்டித்
துரைத்தேவர் எனுமறிஞர் அவர்தான் தம்பி !
இப்போதோர் தமிழ்ச்சங்கம் மதுரை மண்ணில்
இருப்பதற்குக் காரணமே அவர்தான் தம்பி !
எப்போதும் மறவாதே அவரை, நீபோய்
எங்குமுள தமிழர்க்கும் இதனைக் கூறு !

- பாவலர் சுரதா (தேன்மழை-தொகுப்பு)


தொடர்பு முகவரி :

**ஆசிரியர், செந்தமிழ்,**

**மதுரைத் தமிழ்ச்சங்கம்,**

**மதுரை-625001.**

தொலைபேசி : **0452-6575615**

RNI Regd. No.: 5508/56 October 2008

## ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் கதிர் மகாதேவன்

அனுப்புநர்,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை- 625001.

From,
Secretary,
Madurai Tamilsangam,
Madurai - 625001.
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

பதிப்பாசிரியர் : இரா. அழகுமலை, எம்.ஏ. எம்.ஃபில்.,
செயலாளர், மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை—1.
தொலைபேசி : (0452) 6575615

அச்சிடுவோர் : தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை – 1.